Registered as a News Paper in Sri Lanka.

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY දිනක්කතිර්

ஒளி - 01 - கதிர் - 220 22-11-2000 வியாழக்கிழமை பக்கங்கள் - 08 விலை - ரூபா 5/-

அனைத்து வகையான
அச்சுவேலைகளுக்கும் நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்:
ஈஸ்ரன் கிராபிக்ஸ்
திருமலை வீதி
மட்டக்களப்பு.
தொலைபேசி
065-24821

# புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் விமானக்குண்டுவீச்சு!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான புலிபாஞ்சகல், திகிலி வட்டைப்பகுதியில் நேற்றுப்பிற்பகல் ஒரு மணிக்கு குண்டு வீச்சு விமானங்கள் குண்டுத்தாக்குதலை நடத்தின. இது பற்றிய சேதவிபரங்கள் செய்தி எழுதும் வரை அறியப்படவில்லை.

மாவீரர் தினத்தை யொட்டி பாதுகாப்புப்படையினர் உசார்நிலை அடைந்துள்ள நிலையில் நேற்று விமானக்குண்டு வீச்சுக்கள் இடம் பெற்றுள்ளது. இம்மாதம் 25ம் திகதி தொடக்கம் 27ம் திகதி வரை மாவீரர் தினம் விடுதலைப் புலிகளால் அனுஷ்டிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# சுயநிர்ணய உரிமைக்கு ஐரோப்பிய நாடுகள் ஆதரவு

## பிரிட்டிஷ்துணை வெளி விவகார அமைச்சர்

(கொழும்பு)

**இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வாக சுயநிர்ணய உரிமைகளுடன் கூடிய அதிகாரப்பகிர்வு வழங்கப்படுவதற்கு ஐரோப்பிய நாடுகள் அதரவளிக்கும். அதேவேளை ஐக்கிய இலங்கைக்குள் இந்த இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் அதிகாரப்பகிர்வு கொண்டுவரப்படவேண்டும். என பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் பீற்றர் ஹெய்ம் தெரிவித்துள்ளார்.**

இரு நாள் உத்தியோக பூர்வவிஜயத்தை மேற்கொண்டு நேற்று இலங்கை வந்துள்ள பிரிட்டிஷ் வெளிவிகார அமைச்சர் பீற்றர் ஹெய்ம் நேற்று பிரிட்டிஷ் கவுன்சில் நடை பெற்ற கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் இலங்கையின் இனப்பிரச்சினை ஐக்கிய இலங்கைக்குள் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என் பதையே ஐரோப்பிய நாடுகளின் விருப்பமாகும் எனவும் தெரிவித்தார்.

அதிகாரப்பரவலாக்கல் விடயத்தில் வட அயர்லாந்து அனுபவத்தை பயன்படுத்த முடியும். அத்துடன் இலங்கை அரசு கோரும் பட்சத்தில் இதற்கான ஆதரவை வழங்க தயராக இருப்பதாகவும் தெரிவி த்தார்.

# அமெரிக்க துணையமைச்சர் அடுத்தவாரம் வருகிறார்

(கொழும்பு)

அமெரிக்காவின் தெற்காசியப் பிராந்தியங்களுக்கான துணைச் செயலாளர் ஹால்கின்ரபோட் அடுத்த வாரம் இலங்கை வரவிருக்கிறார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கு வருகை தரும் அமெரிக்காவின் துணைச் செயலாளர் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தமிழ் கட்சித்தலைவர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனப் பிரதி நிதிகள் ஆகியோருடன் பேச்சுக்கள் நடத்தவுள்ளதாக எதிர்பார்க்கப் படுகிறது.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவீரர்தின ஏற்பாடுகள்

(நமது நிருபர்)

மாவீரர் தினத்தையொட்டி மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களான கொக்கட்டிச் சோலை. வவுணதீவு, கரடியனாறு, வாகரைப் பகுதிகள் எங்கும் சுவரொட்டிகள், பதாதைகள், வீதித் தோரணங்கள், என்பன கட்டப் பட்டும் அலங்கரிக்கப்பட்டும் உள்ளன.

எதிர்வரும் 25ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு விடுதலைப்புலிகளின் "புலிக்கொடி" ஏற்றலுடன் மாவீரர் நாள் அனுஷ்டிப்பு ஆரம்பமாகும். எனப் பிரசுரங்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் மாவீரர் துயிலும் இல்லங்களான மாவடிமுன்மாரி, தாண்டியடி, தரவை ஆகிய 3 இடங்களிலும்

8ம் பக்கம் பார்க்க

# கடத்தப்பட்ட பிரிட்டிஷ் பெண் நேற்று பொலிஸாரால் கண்டுப்பிடிப்பு

(நமது நிருபர்)

தம்புள்ளப் பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இருந்து கடந்த திங்கட்கிழமை காணாமல் போன பிரிட்டிஷ் பெண்மணியை நேற்று பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

தம்புள்ள பொலிஸாரும் விமானப்படையினரும் கூட்டாக மேற்கொண்ட தேடுதலை அடுத்து பலத்த காயங்களுடன் தம்புள்ள காட்டுப்பகுதியில் இப்பெண்மணி கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.தற்போது இப்பெண்மணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

# சமாதான முயற்சிக்கு எதிராக சிஹலஉறுமய கட்சியினர் ஆர்ப்பாட்டப் பேரணி

(கொழும்பு)

சிஹலஉறுமய கட்சியினர் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றினை நடத்தினர்.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகள் மேற்கொண்டு வரும் நோர்வே பிரதிநிதி எரிக்சொல் ஹெய்ம் மற்றும் பிரிட்டிஷ் துணை வெளி விவகார அமைச்சர் பீற்றர் ஹெய்ம் ஆகியோரது சமாதான முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தே சிஹல உறுமய கட்சியினர் இந்த ஆர்ப்பாட்ட பேரணியை நடத்தினர்.

பிரிட்டிஷ் கவுன்சில் முன்னால் குழுமிய சிஹல உறுமய கட்சி ஆதரவாளர்கள் நோர்வே பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு எதிராக கோஷங் களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர்.

இங்கைக்கு வருகை தந்துள்ள பிரிட்டிஷ் துணை வெளிவிவகார அமைச்சர் பிரிட்டிஷ் கவுன்ஷிலில் சமூகமளிக்க இருந்த வேளையிலேயே இந்த ஆர்ப்பா ட்டம் இடம்பெற்றது. இச்சம்பவ த்தை தொடர்ந்து பொலிஸார் மேற்படி ஆர்ப்பாட்ட காரர்களை கலைந்து செல்லுமாறு எச்சரித் தனர்.

# கிரனைட் வீச்சு,துப்பாக்கிச் சூடு சிறுவன் பலி, நால்வர் காயம்

(யாழ் நிருபர்)

மானிப்பாய் ஆனைக் கோட்டை சந்தியில் நேற்று முன் தினம் காலை 9.45 மணியளவில் இடம்பெற்ற கிரனைட் வீச்சு சம்பவங்களில் 10 வயது சிறுவன் ஒருவன் பலியானான். இராணுவச் சிப்பாய் உட்படநால்வர் காய மடைந்துள்ளனர்.

யானைக் கோட்டைச் சந்தியில் நின்ற இராணுவத்தினர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் கிரனைட் வீச்சில் ஈடுபட்டு தப்பி ஓடினார்கள்

8ம் பக்கம் பார்க்க

# வெள்ள நிவாரணத்திற்கு திறைசேரி நிதி வழங்கவில்லை

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்த மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு நிவார ணங்களையும், இடம்பெயர்ந்த மக்களுக்கு சமைத்த உணவுகளையும் வழங்குவதற்கு இரண்டுகோடி 90இலட்சம் தேவை என மாவட்ட செயலகம் சமூக சேவைகள் திணைக்களத்தை கோரிய போதிலும் அப்பணம் இதுவரை வந்துசேரவில்லை என மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. இதனால் நிவார ணங்கள் வழங்கும் பணி தாமதமா கியுள்ளது. நிவாரணங்களை வழங்குவதற்குரிய நிதியை வழங்குவதற்கு சமூக சேவைகள் அமைச்சு அனுமதி வழங்கிய போதிலும் திறைசேரி இந்த

8ம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்பில் பலத்த மழை

மட்டக்களப்பில் நேற்று இரவு மீண்டும் இடி முழக்கத்துடன் பலத்த மழை பெய்துள்ளது.

# செல்வராசா இன்று சத்தியப்பிரமாணம்

(அரியம்)

இம்மாதம் 7ம் திகதி சுட்டுக்கொல்லப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் நிமலன் சவுந்தரநாயகத்தின் இடத்திற்கு முன்னாள் பாராளு மன்ற உறுப்பினரான பொன். செல்வராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்று பாராளுமன்றத்தில் பொன்.செல்வராசா உத்தியோக பூர்வமாக சபாநாயகர் அனுரா பண்டார நாயக்கா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத் தில் தமிழர் விடுதலைக் கூட்டணி 54,448வாக்குகளைப் பெற்று போனஸ் உட்பட இரு ஆசனங்க ளைப் பெற்றது.

விருப்புத் தெரிவு வாக்குகள் அடிப்படையில் 16,452 விருப்பு வாக்குகளைப் பெற்று நிமலனும், 12,605 விருப்பு வாக்குகளைப் பெற்று

8ம் பக்கம் பார்க்க

## வக்கணை வண்ணக்கர்



# தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055, 24821
பெ(F)க்ஸ் : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk


## இலட்சியம் நிறைவேற அந்தரங்க சுத்திவேண்டும்

பயங்கரவாதிகள் என்று விடுதலைப்புலிகளை அழைத்துக் கொண்டு எப்படி அவர்களுடன் சமாதானப்பேச்சு நடத்துவது என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மூத்த தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மருதூர் கனி சரியாக சுட்டிக்காட்டியிருக்கிறார்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான சுமூகமான தீர்வு காணப்பட வேண்டும். என்பதே தனது நோக்கமும் அரசின் இலட்சியமும் ஆகும் என்று ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா கூறி வருகிறார் எப்படியாவது போரை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டை விருத்தி செய்யவேண்டும் என்றுதாம் உறுதி பூண்டிருப்பதாக ஜனாதிபதி அமைச்சரவையில் கூறியதாகவும் செய்திகள் வெளி வருகின்றன

இனப்பிரச்சினைக்கு நல்லதொரு நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டும் என்று இரு தரப்பும் ஏற்றுக் கொண்ட நோர்வையின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்த்தரான அல்லது உதவியாளரான சமாதான தூதுவர் எரிக் சொல்ஹைம் தனது முயற்சிகளை நல்லமுறையில் ஆரம்பித்தார்.

நோர்வேயின் இந்த முயற்சிக்கு ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன், அமேரிக்கா மற்றும் பல நாடுகளும் ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கி வருகின்றன.

இலங்கையில் போர் மேகம் விலகி அமைதி ஏற்படுத்துவதற்கான வழி வகைகள் என்ன ? இவற்றை மேற்கொள்ளலாமா என்று எல்லோரும் ஆலோசனை செய்து கொணடிருக்கின்றனர்.

பிரிட்டிஸ் வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கு வந்திருக்கிறார் அமெரிக்க அமைச்சர் வந்து கொண்டிருக்கிறார் இந்திய தூதுவர் புதுடில்லிக்கு ஆலோசனைக்கு போய் வருகிறார்.

உலக நாடுகள் எல்லாம் இலங்கையில் மோதலை நிறுத்தி நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான வழி பிறக்குமா என்று தீவிரமாக முறற்சி செய்து வருகின்றன. இந்த நிலையில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்சுமன் கதிர்காமர் பயங்கரவாதம் பற்றியும் தமிழீழக் கோரிக்கையை விடுதலைப்புலிகள் கைவிட வேண்டும் என்று கூறுகின்றார்

பேரினவாதிகள் நோர்வேயின் தலையீடு வேண்டாமென்று கூச்சல் போடும் அதே சமயம் கதிர்காமரும் வேறு எந்த வெளிநாடும் எங்கள் விவகாரத்தில் தலையீட முடியாது என்று கூறிவருவது வேடிக்கையானது.

இலங்கையில் மட்டுமல்ல வெளி நாடுகளில் வாழும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராகத் துவேஷத்தைத் தூண்டுவதில் மும்முரமாகச் செயல்படுவதில் சளைக்கவில்லை.

அமெரிக்காவில் விடுதலைப்புலிகள் இயக்கம் தடைசெய்யப் பட்டிருந்த போதிலும் அமெரிக்கப் பாடசாலைகளில் விடுதலைப் புலிகள் மாவீரர் தினத்தைக் கொண்டாடுகிறார்கள் என்று கொழும்பில் இருந்து வெளிவரும் ''ஐலன்ட்'' பத்திரிகை நேற்று தனது தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருக்கிறது.

அமெரிக்க, பிரிட்டன, பிரான்ஸ், கனடா மற்றும் உலக நாடுகளிலெல்லாம் விடுதலைப்புலிகள் இயக்கம் தங்கள் ''பயங்கரவாத நடவடிக்கைக்கு'' நிதி திரட்டுவதாக இந்தப் பத்திரிகை தொடர்ந்து பிரசாரம் செய்து வருகிறது.

இந்தப் பத்திரிகையின் விஷமப் பிரசாரத்தின் விளைவாகத் தான் லக்ஸ்மன் கதிர்காமர் லண்டனுக்குச் சென்று விடுதலைப்புலிகள் இயக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும் நிதி திரட்டுவதற்கு இடமளிக்கக் கூடாதென்றும் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்ய வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன் விளைவாகத்தான் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அலுவலகம் சோதனையிடப்பட்டது.

''பயங்கரவாதிகள்'' என்று விடுதலைப்புலிகளுக்கெதிராக உலகம் முழுவதிலும் விஷமப்பிரசாரம் செய்து வரும் அதே சமயம் அரச பயங்கரவாதத்தை வளர்ப்பதற்கு வெளிநாடுகளில் ஆயுதக் கொள்வனவுக்கு பேச்சுவார்த்தை நடத்துவதும் இலங்கை அரசு தான்.

இலங்கையில் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை என்று சொல்லி இலங்கையில் தமிழர் அனைவரையுமே பயங்கரவாதிகளாகச் சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து துவேஷத்தைத் தூண்டி விடுவது பேரினவாதிகளும் பேரினவாத பத்திரிகைகளும் மட்டுமல்ல அரச யந்திரமும் கூடத்தான்.

தொடர்ந்து போர் நடக்கும் அதே சமயம் பேச்சு வார்த்தை முயற்சியும் நடைபெறும் என்று சொல்லிக் கொண்டு போரை விஸ்தரிக்கும் நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டு பயங்கரவாதிகள் என்று பிரச்சாரமும் மேற்கொண்டு சமாதானப் பேச்சுக்கும் சமாதானத் தீர்வுக்கும் தயாரென்று சொல்வது எதற்காக

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி செய்யும் நாடுகளின் மகாநாட்டை எதிர்பார்த்தா? ஏமாற்றவா?

எந்த இலட்சியமும் அந்தரங்க சுத்தியுடன் எடுக்கும் முயற்சிகளையும் பொறுத்தே வெற்றியளிக்கும்.

இலங்கை அரசு அந்தரங்க சுத்தியுடன் தான் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன் வந்திருக்கிறதா?

# விலைமதிப்பற்ற —மனித வாழ்க்கை—

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா உலகலாவிய ரீதியல் தனது 75வது ஜனன தினத்தை 23ம் திகதியான இன்று புட்டபர்த்தியில் கொண்டாடிக்கொண்டிருக்கும் வேளையில் 1.10.95 அன்று பகவான் பிரசாந்தியில் ஆற்றிய அருளுரையை எடுத்துப் பார்ப்போம்.



### விலைமதிப்பற்ற வாழ்க்கை

வாழ்க்கை விலைமதிப் பற்றது. இத்தகைய பவித்ரமான வாழ்க்கையில் எத்தனையோ தடங்கல்கள் ஏற்படுகின்றன. வாழ்க்கையென்னும் மஹா சமுத்திரத்தில் சுகம் துக்கம் என்கிற அலைகள் மாறி மாறி வீசுகின்றன. போராட்டங்ளுக்கிடையே வாழ்க்கை நடத்தும் மனிதன் தனது அதிக ஆசைகளாலும், அவை நிறைவேறாத ஏமாற்றத்தாலும் அல்லற் படுகிறான். உலகியலான விஷயங்களுக்காக மனிதன் தன் விலைமதிப்பில்லாத வாழ்க்யை வீணடிக்கிறான்.! மனித வாழ்க்கைக்கு உடல் மிகவும் அவசியமானது, ஆதாரமானது. உடலின்றி மனிதனால் எந்தச் சிறிய செயலையும் செய்ய முடியாது! உடல், மனம், ஆத்மா இவற்றின் சம்பந்தமே மனிதனின் வடிவம்! ஆனால் மனித மனத்தையும், ஆத்மாவையும் மறந்து விட்டு உடலேயே பெரிதாக எண்ணுகிறான்.! அதனால் அவன் நேரம் விணாகிறது.! மனமே இல்லை என்றால் எதையும் சாதிக்க இயலாது. மனம் வாழ்க்கையின் ஒரு முக்கிய அங்கம்.! அதுவே மனிதனின் வாழ்க்கை என்றும் கூட சொல்லலாம்! உலகம் முழுவதும் மனத்தைச் சார்ந்தே இருக்கிறது. ''மனோ மூலம் இதம் ஜகத்' மனமே இவ்வுலகின் ஆதாரம்! ஆனால் மனிதன் மனதைப் பற்றி ஆரய்ந்து பார்க்க மறுக்கிறான்! மனம், எண்ணங்களின் கூட்டுக் கலவை! இத்தகைய எண்ணங்களினால் அவன் வாழ்க்கை பவித்திரமானதாக மாறும்படி மனிதன் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும்! அவன் எண்ணங்கள் தூய்மையாகவும் உயர்ந்ததாகவும் இருக்கும்போது மனிதனின் வாழ்க்கை மற்றவருக்கு எடுத்துக்காட்டாக ஆகிறது! ஆகையால் ஒவ்வொரு மனிதனும், தூய்மையான, பவித்திரமான எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுதல் அவசியம்!

### பகவான் சத்திய சாயி நமோ நம

சிவயோகச் செல்வர் த.சாம்பசிவம்

ஞான சக்திக் கனலே நமோ நம
நாரண ஹர சாயி நமோ நம
கான பக்திக் குரலே நமோ நம - பரப்பிரம்மா
சத்சித்தானந்த சொரூபா நமோ நம
சதா சிவமான சாயி நமோ நம
அத்வாதீத குரவே நமோ நம - அழல்ரூபா
தீனபந்து தயவா நமோ நம
தாரணி காக்கும் சாயி நமோ நம
ஈனர்க்குதவும் ஈசா நமோ நம - அவதாரா
சத்திய ஞான சுந்தரமே நமோ நம
சகள நிட்கள சாயி நமோ நம
புத்தேள் புத்திக் கதிபா நமோ நம - பவநாசா
ஏனம் மிக்க எனையாள் நமோ நம
ஏரம்ப ஏரக சாயி நமோ நம
வானமிழ் தாயருள் பாபா நமோ நம - வரம்தாராய்
பர்த்தி புரிவாழ் வரசே நமோ நம
பஜனாம்ருதப் பிரியா நமோ நம
சுத்த சன்மார்க்க சாயி நமோ நம - செகதீசா
சோன வண்ண கிருஷ்ணசாயி நமோ நம
சோகம் தீர் சாயி ராமா நமோ நம
தான தர்ம அன்பில் உறைவோய் நமோ நம- துவைதீசா
பத்தவதார சிரடி சாயி நமோ நம
பகவான் சத்திய சாயி நமோ நம
சித்திநல் பிரேம் சாயி நமோ நம - பெருமாளே

### மனம்

இது ஒரு துணி! இது எப்படி அமைகிறது! நூல்களின் இணைப்பால் ஏற்படுகிறது.! நூல் பஞ்சிலிருந்து வருகிறது!. பஞ்சு -அதிலிருந்து நூல் - அதை நெய்த பின் - துணி ! அதே போல்த்தான் எண்ணங்கள் - அதிலிருந்து ஆசைகள் - ஆசைகளிலிருந்து மனம்! ஆகையால் மனம் என்பதும் ஆசைகளின் தொகுப்பு ! அதனால்தான் ஆசைகளைப் படிப்படியாகக் குறைத்துக்கொள்ள வேண்டும்.! அங்கவீனர்கள் இச் சமுதாயத்தில் சரிவர மதிக்கப் படுவதில்லை! இவ்வுடலின் ஒவ்வொரு அங்கமும் முக்கியமானவையே! மனிதனுக்கு பவித்ரமான, கல்மஷமற்ற, சிறந்த மனம் அமைய வேண்டும்! உடல் அழகாக இருக்கலாம்., மனம் அழுக்காக இருந்தால் என்ன? பலன்? அதனால் சரீரம் என்பது மனித வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமான ஒன்று! அங்கங்கள் சரியாக இருக்கும் போது எதையும் அவனால் சாதிக்க இயலும்!

### குறிக்கோள்

மனிதன் தன் வாழக்கையின் குறிக்கோளை அடைய வேண்டும்! எந்தக் குறிக்கோளும் இன்றி மனித வாழ்க்கை எதற்கும் பயனில்லை.! மனிதனுக்கு உடல் கொடுக்கப்பட்டதே ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காகத்தான்! சில கடமைகளை ஆற்றத்தான் உடல் அளிக்கப்பட்டிருக்கிறது! இவற்றையெல்லாம் சிந்திக்காமல் மனிதன், உணவு, உடை, உறையுள் இவற்றுக்காகவே வாழ்க்கையை வீணடிக்கிறான்! மிருகங்களையும் பறவைகளையும் போல உணவுக்காக அலைவதுதானா? மனித வாழ்க்கையின் நோக்கம்? மனிதனிடம் ஒரு நிரந்தரமான சத்யம் இருந்து வருகிறது! அந்த சத்யமான ஞானத்தை உணர மனிதன் முயற்சி எடுக்க வேண்டும்!

தற்போது எத்தனையோ வகையான கல்வித் திட்டங்கள் உள்ளன.! நம்முடைய வாழ்க்கையை எப்படியெல்லாமோ செலவழிக்கிறோம்! எதுவாயினும் யாரும் மனித வாழ்க்கையின் ஆதாரமான குறிக்கோள் என்பதைப்பற்றி உணர முயற்சிப்பது கூடக் கிடையாது.

### சேவை

மனிதன் தன் வாழ்க்கையை பிறருக்கு உதவதற்காக வாழ வேண்டும்! எத்தனை புண்ணிய நதிகள் ஆடினும் எத்தனை ஜபம், தபம் யாகம் செய்தாலும், பிறருக்கு சேவை செய்யாவிடில், மனித வாழ்க்கை வீண் தான்! ஒவ்வொருவரும் சேவையைப் பெறுவதற்கும் சேவை செய்வதற்கும் தயாராக இருக்க வேண்டும்! சேவை செய்ய ஏற்பட்டது தான உடல், சேவை செய்வதே மனித வாழ்க்கையின் லட்சியம் எனப் புரிந்து கொள்ள வேண்டும்! மற்றவருக்குச் சேவை செய்து நாம் பிறவி எடுத்த பயனை அடைய வேண்டும்! நமக்கு முடிந்த வரை சேவை செய்ய வேண்டும். நிறைய செய்ய வேண்டும் என்பது அவசியமில்லை! செய்யும்போது மனித குணநலன்களையும் மனதில் கொண்டு சேவை செய்ய வேண்டும்! மனித சமுதாயத்தில் பிறந்து, மனிதனாக வளர்ந்து, வாழ்ந்து வருகையில் மனித குணநலன்களை மனதில் பதித்துக் கொள்ளவில்லையெனில், அவனை மனிதன் என்று சொல்ல இயலுமா?

### நண்பன்

உன்னுடைய உண்மையான நண்பன் யார்? நல்ல நிலையில் இருக்கும் வரை அனைவரும் ''ஹலோ' 'ஹலோ' என்று உறவாடி உடன் வருவார்கள்! கையில் பணமும், பதவியும் இருக்கும் வரை அனைவரும் நண்பர்கள் தான்! இவை இரண்டம் போய்விட்டடால்! எதிரியாகி விடுகிறார்கள்! கடவுள் அப்பப்பட்டவர் அல்ல! அவரே **True Friend**, உண்மையான சினேகிதன் ! நீ எந்த நிலையில் இருந்தாலும், உனக்கு முன்னும் பின்னும், மேலும், கீழும், உடனும் இருந்து உனக்கு உதவும் நல்ல நண்பர் கடவுள் தான்! இத்தகைய எண்ணங்களை, திவ்வியமான உள்ளுணர்வுகளை வளர்த்துக்

(4ம் பக்கம் பார்க்க)

# அமெரிக்க தேர்தலில் சிக்கல் நீடிக்கிறது; 17 இலட்சம் வாக்குகளையும் சேர்க்க சம்மதம்

(வாஷிங்டன், நவ.22)

அமெரிக்காவில் நவம்பர் 7-ந்தேதி அதிபர் தேர்தல் நடந்தது தெரிந்ததே. இருந்தும் இதுவரை தேர்தல் குழப்பம் தீரவில்லை. புளோரிடா மாநிலத்தில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்கள் தான் அடுத்த அதிபர் என்ற நிலை உருவாகி இருப்பதால் அந்த மாநில வாக்கு எண்ணிக் கையை அனைவரும் ஆவலுடன் எதிர் பார்த்தபடி உள்ளனர். ஆனால் புளோரிடா மாநில வாக்கு எண்ணிக்கையிலோ குளறுபடிக்கு மேல் குளறுபடிகள் ஏற்பட்டு வருகிறது.

புளோரிடா மாநிலத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் வாக்கு எண்ணிக்கை முடிந்ததில் புஷ் 930 ஓட்டு வித்தியாசத்தில் முன்னணியில் உள்ளார். இதனிடையே 3 மாவட்டங்களில் கையால் எண்ணும் பணி தடைபட்டு மீண்டும் தொடங்கியுள்ளது. இந்த 17 லட்சம் வாக்குகளையும் இறுதி முடிவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அல்கோர் தரப்பினர் வலியுறுத்தி வருகிறார்கள். புஷ் கட்சியினர் அதை ஏற்க மறுக்கிறார்கள்.

இந்த நிலையில் பிரச்சினை தற்போது புளோரிடா மாநில சுப்ரீம்கோர்ட்டுக்கு வந்துள்ளது. புளோரிடா மாநில தேர்தல்

## உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

பிரச்சினை குறித்து புளோரிடா மாநில சுப்ரீம் கோர்ட்டு நேற்று முன்தினம் விசாரணை தொடங்கியது. அதில் புஷ், அல்கோர் ஆகியோரது வக்கீல்கள் ஆஜராகி வாதாடினார்கள். இருவருக்கும் தலா ஒரு மணிநேரம் ஒதுக்கப்பட்டது.

சார்லஸ் வெல்ஸ் என்பரது தலைமையில் 7 நீதிபதிகள் கொண்ட குழு இந்த வாதத்தை கேட்டு வருகிறது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த வழக்கு, டி.வி. மூலம் அமெரிக்கா முழுவதும் ஒளிபரப்பப்பட்டது. வழக்கு நடக்கும் டல்லாசி கட்டிடத்தின் மீது ஹெலிகாப்டரில் பறந்தபடி போலீஸ் அதிகாரிகள் கண்காணித்து வருகிறார்கள். அமெரிக்க தேர்தல் முறையை கண்டித்து நீதி மன்ற கட்டிடத்துக்கு வெளியே பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் நடத்துவதால் நீதிமன்ற கட்டிடத்தை சுற்றி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்த விசாரணையின் முடிவில் நீதிமன்றம் தீர்ப்பு அளிக்க உள்ளது. புதிய அதிபர் யார்? என்பது அப்போது உறுதியாகும். அடுத்த 48 மணிநேரத்தில் தீர்ப்பு வெளியாகலாம் என்று ஓய்வு பெற்ற சுப்ரீம்கோர்ட்டு நீதிபதி கருத்து கூறியிருந்தும் நேற்று தீர்ப்பு எதுவும் வெளியாகவில்லை. இந்த வழக்கில் எப்போது தீர்ப்பு வெளியாகும் என்பதை திட்டவட்டமாக கூறமுடியாது என 7 நீதிபதிகள் குழு கை விரித்து உள்ளது.

அமெரிக்க அதிபர் யார் என்ற பிரச்சினை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் வரை தொடர்ந்தால் புதிதாக பதவி ஏற்கப்போகும் அதிபருக்கு அது பெரும் தலைவலியாக இருக்கும் என்று அரசியல் நிபுணர்கள் கருதுகிறார்கள். இந்த பிரச்சினையில் அடுத்தகட்ட நடவடிக்கை எது என்பதையும் அவர்கள் கூற மறுத்து விட்டனர்.



ரஷ்யாவின் நாட்டிய தாரகை மாயா பிலிசெட்ஸ்காயாவின் 75வது பிறந்தநாளின் போது ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் மலர்க்கொத்து கொடுத்து வாழ்த்தும் காட்சி

# பன்னாரி காட்டில் அதிரடிப்படையினர் தேடுதல் வேட்டை; வெடிமருந்து சிக்கியது.

(சென்னை, நவ.22-)

கன்னட நடிகர் ராஜகுமார் விடுதலைக்கு பிறகு, சந்தன கடத்தல் மன்னன் வீரப்பனை பிடிக்க அதிரடிப்படையில் கூடுதலாக அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். கூடுதல் டி.ஜி.பி. அலெக்சாண்டர், ஐ.ஜி.பாலசந்திரன், டி.ஐ.ஜி. தமிழ்ச்செல்வன், போலீஸ் சூப்பிரண்டுகள் சைலேந்திரபாபு, அசோக்குமார் தாஸ், பெரியய்யா உள்பட 500 பேர் அடங்கிய அதிரடிப்படை அமைக்கப்பட்டு உள்ளன. இந்த அதிரடிப்படையினர் நேற்று வீரப்பன் கும்பலை பிடிக்க காட்டுக்குள் சென்றனர்.

### காடு சீல் வைப்பு

இவர்கள் காட்டுக்குள் செல்வதற்கு முன்பாக வீரப்பனை பிடிக்க புது வியூகங்களை அமைத்தனர். வீரப்பன் தங்கி உள்ள காட்டில் போலீஸ் நடவடிக்கை எடுக்கும் போது எந்தெந்த வழிகளில் வீரப்பன் தப்பி செல்வான் என்று வரைபடங்களை வைத்து ஆலோசனை நடத்தினர். இந்த ஆலோசனைக்கு பிறகு வீரப்பன் தப்பி செல்லும் பகுதிகளை போலீசார் தீவிரமாக கண்காணித்து சீல் வைத்தனர்.

### ராஜ்குமார் தங்கிய இடம்

நடிகர் ராஜ்குமாரை கடத்தி சென்ற வீரப்பன் அவரை தினசரி ஒவ்வொரு இடமாக மாற்றி மாற்றி தங்க வைத்து இருந்தான். போலீஸ் அதிரடி நடவடிக்கை எடுத்து விடக்கூடாது என்பதற்காக சுமார் 60 இடங்களில் தங்க வைத்து இருந்தான். அந்த இடங்கள் எந்தெந்த இடங்கள் என்பதை அதிரடிப்படை அதிகாரிகள் தீவிரமாக கண்டறிந்துள்ளனர். இதனால் அந்த பகுதியில் அதிரடிப்படை வீரர்களை அதிக அளவில் குவிக்க முடிவு செய்துள்ளனர்.

### தேடுதல் வேட்டை

அதிரடிப்படையினர் பண்ணாரி, சத்தியமங்கலம், தாளவாடி, வெள்ளித்திருப்பூர் உள்பட 8 இடங்களில் முகாம்களை அமைத்து உள்ளனர். இப்போது மேலும் 7 இடங்களில் முகாம்கள் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இந்த முகாம்களில் இருந்து வீரர்கள் தனித்தனி குழுக்களாக பிரிந்து காட்டுக்குள் சென்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகிறார்கள்.


வீரப்பனை பிடிக்க செல்லும் அதிரடிப்படையினருக்கு நவீன ரக துப்பாக்கிகள், கண்ணி வெடிகளை கண்டுபிடிக்கும் கருவிகள், அதி நவீன பைனாகுலர்கள் உள்பட அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு உள்ளன. இதுவரை அதிகாரிகள் தவிர 500 வீரர்கள் தான் இருந்தனர். இது மேலும் உயர்த்தப்படுகிறது. தற்போது சேலம், தர்மபுரி, நாமக்கல், திண்டுக்கல், பழனி ஆகிய இடங்களில் இருந்து பஸ்களில் சிறப்பு காவல் படையினர் பண்ணாரி முகாமுக்கு சென்றுள்ளனர்.

### கர்நாடக ஐ.ஜி ஆலோசனை

கர்நாடக அதிரடிப்படை ஐ.ஜி.ஹர்சவர்த்தனே பண்ணாரி முகாமுக்கு சென்று தமிழக அதிரடிப்படை அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். அப்போது இரு மாநில போலீசாரும் இணைந்து வீரப்பனை பிடிக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி விளக்கி கூறினார். அதன் பிறகு தனித் தனியாக தேடுதல் வேட்டை தொடங்கியது.

### வெடி மருந்து சிக்கியது

அதிரடிப்படை போலீஸ் சூப்பிரண்டு பெரியய்யா தலைமையிலான குழுவினர் சத்திய மங்கலம் காட்டுப் பகுதிக்குள் சென்று வீரப்பனை தேடினர். அப்போது ஒரு இடத்தில் புதிதாக குழி தோண்டி இருப்பதற்கான அடையாளம் தெரிந்தது. அந்த இடத்தில் கண்ணிவெடி புதைக்கப்பட்டு இருக்கலாம் என்று அதிரடிப்படையினர் சந்தேகப்பட்டு வெடிகுண்டை கண்டு பிடிக்கும் கருவிகள் மூலம் சோதனை போட்டனர். பிறகு குழியை தோண்டி பார்த்தனர். அந்த குழிக்குள் வெடி மருந்துகளும், சி.டி கேசட்டுகளும், மருந்து மாத்திரைகளும், பாத்திரங்களும், ஒரு திருக்குறள் புத்தகமும் இருந்தது. அவற்றை அதிரடிப் படையினர் கைப்பற்றினர். இதனால் அந்த பகுதியில் வீரப்பனோ அல்லது அவனது கூட்டாளிகளோ நடமாடி இருக்கலாம் என்று கருதி அதிரடிப் படையினர் நாலாபுறமும் தேடுதல் வேட்டையில் முழு மூச்சுடன் ஈடுபட்டனர்.



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட உப ஜனாதிபதி அல் கோர் வெள்ளை மாளிகைக்கு அருகேயுள்ள கட்டடத்திலிருந்து செயற்கைக் கோள் மூலம் உரையாற்றியபின் வந்தபோது எடுத்த படம்

# காஷ்மீர் விடுதலைக்கு பாகிஸ்தான் உதவ பேரணி

(ஆஸாத்)


பாகிஸ்தான் கட்டுப்பாட்டுப்பகுதியில் இருக்கும் காஸ்மீர் பகுதியில் ஆயுதப்பாணிக்கு ஒன்று இந்திய கட்டுப்பாட்டிலிருக்கும் காஷ்மீர் பகுதிகளில் போராடும் போராளிகளுக்கு பாகிஸ்தானிய இராணுவம் உதவ வேண்டும் என கோரி பேரணி ஒன்றை நடாத்தியுள்ளது.

சிமாலியப் பகுதியில் போராட்டம் நடாத்திவரும் இக் குழுக்களில் ஒன்றான முஜாகீத் குழுவினரே இக்கோரிக் கையை விடுத்திருக்கின்றனர்.

இந்தப் பேரணியில் சுமார் 5000 பேர் கலந்து கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தியா விடமிருந்து காஷ்மீரை விடுவிப்பதற்கு பாகிஸ்தான் இராணுவம் உதவ வேண்டுமென இக்குழுவின் தலைவர் மௌலானா பாருக் கூறியுள்ளார்.

இந்த இரு நாட்டுக்கும் இடையிலான எல்லையை பொருட்படுத்துவது இல்லை எனவும் அதனால் அன்றாடம் அதனை கடப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த முஜாகீதீன் அமைப்பு அமெரிக்காவினால் பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனப் படுத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது.



குடியரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட ஜோர்ஜ்புஷ் ஓஸ்ரினில் வந்திறங்கிய போது இப்படித் தோன்றினார்.

# விலைமதிப்பற்ற............

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டால்தான் எத்தகைய கஷ்டமான நிலை வந்தாலும் எதிர்கொள்ள முடியும்!

### குணங்கள்

பிறக்கும் போது உனக்கு ஏதாவது தீய எண்ணங்கள் இருந்தனவா? குணங்களே இல்லை! உணவுப் பழக்கங்கள் மாறுதலடைந்து கொண்டே வர, படிக்கும் படிப்பு தொடர்ந்து வர நம்முடைய நடையுடை பாவணைகளும் மாற, அகங்காரம் உள்ளே குடியேறுகிறது! ஆட்ம்பரத்திலும், கேளிக்கைகளிலும் வாழ்க்கை நடாத்துகிறோம். கூடாது! மனித வாழ்க்கை அடக்கத்தோடும், பணிவோடும் நடாத்தப்பட வேண்டும்! அதுவே மனித வாழ்க்கை வாழ்வதற்கான அடையாளம்! மாணவத்வம் என்றால் மனம், வாக்கு, செயல் மூன்றும் ஒன்றாய் இருப்பது என அர்த்தம்! மனம் வேறு சொல் வேறு, செயல் என்றிருப்பதால்தான் மாணவத்வம் என்பது நமக்கு விளங்குவதில்லை! மறந்தும் போகிறோம்! மனித குண நல மேம்பாடுகளைப் பற்றியும் நம்மால் உணர முடிவதில்லை! மற்றவரை மதிப்பதும், மற்றவரால் மதிக்கப்படுவதும் இன்றிப் போகிறோம்! ஆனால் நாம் மற்றவரை மதித்து அவரிடமிருந்து நன்மதிப்பைப் பெறுமதியாகத் திரும்பப் பெற் வேண்டும்!

வாழ்க்கை ஒரு வழிப்பாதை அல்ல! கொடுத்து பகாடுத் மரியாதை கொடுத்து மரியாதையைப் பெற வேண்டும்! சரியான முறையில் மதிப்பளிக்க வேண்டும்.

கடவுள் எல்லோரிடமும் இருக்கிறார்! அதையே ஈசுவரஸ் ஸர்வ பூதானாம் என்றார்கள்! யாரையும் வெறுக்கக் கூடாது எவருக்கும் பாதகமர்கச் செயல்படக் கூடாது! கூடுமானவரை பிறருக்கு மகிழ்ச்சியளிக்கும் வகையில் செய்யப்பட வேண்டும்.

### விளைவு

மனித வாழ்க்கை என்பது, பூர்வ ஜன்மங்களில் நீங்கள் செய்த நற்கருமங்களின் விளைவு! கடவுளின் சங்கல்பமே, நீங்கள் இந்த வடிவம் எடுப்பதற்கு உண்மையான காரணம்! இந்த சிருஷ்டியில் அனைவரும் தெய்வீக குணங்களோடு இருக்க வேண்டும்! மனிதன் தன் உள்ளுரையும் தெய்வத்தைப் பிரகடனப்படுத்த வந்த வடிவம்! இந்நாளில் மனித குணமே மறந்து விட்டது! உணவையும், குடிக்கும் நீரையுமே முக்கியமாக எண்ணும் நிலை ஏற்பட்டு விட்டது.! இது தவறு! நம் குறிக்கோளை அடைய வேண்டும்! மற்றவருக்கு ஒரு எடுத்துக் காட்டாக வாழ வேண்டும்!

எந்தப் படிப்பு படித்தாலும், பதவியில் இருந்தாலும் மனித குணத்தை மறந்து விட்டிருந்தால் மனித வாழ்க்கையே வியர்த்தம் தான்.

### பரிசுத்தம்

பணமோ, கல்வியோ எதுவுமே கெட்டது அல்ல! நாம் அவற்றை எப்படிப் பயன்னடுத்துகிறோமோ எந்த வகையில் அவை அமைகின்றன!

நீர், பரிசுத்தமானதாக இருக்கிறது! சிவப்பு நிற போத்தலில் ஊற்றினால், அதுவும் சிவப்பாகத தான் தெரிகிறது.! கருநிற போத்தலில் ஊற்றினால், அதுவும் கருநிறமாகத் தெரிகிறது! அது கருப்பா? சிவப்பா? இல்லை! போத்தலின் நிறமே நீரின் நிறமாக அமைகிறது. அதுபோலவே கல்வியும் பரிசுத்தமானதுதான்! பவித் திரமானதுதான்! பணமும் அப்படியே! ஆனால் ரஜோ குணம் உடையவரிடம் சேரும் போது அது சிவப்பாகவும் தமோ குணத்தை உடையவரிடம் சேரும் போது, கருப்பாகவும் தெரிகிறது. ஆகவே இவையெல்லாம் நம் குண தோஷமேயன்றி கல்விக்கோ தனத்துக்கோ குறை என்பது இல்லை!

### அகங்காரம்

படித்தவரும், பணம், படைத்தவரும் அகங்காரத்துடன் செயல்படுகிறார்கள் என்கிறார்கள்! இது படிப்பிற்கோ, பணத்திற்கோ சம்பந்தப்பட்டதல்ல! நம்முடைய ரஜோ குண, தமோ குணத்தையே இது காட்டுகிறது.

இத்தகைய குணங்களை அறவே களைந்து விட்டு திவ்வியமான, புதிய குணநலன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்! மனித வாழ்க்கைக்கு, அவற்றின் உயர்ந்த குண நலன்களால் மதிப்பு ஏற்படுத்த வேண்டும்! மனித வாழ்க்கைக்கான தகுதியையும் குணத்தையும் போற்றி பாதுகாக்க வேண்டும். கௌரவத்தைக் காப்பாற்ற சில காலம் பிடிக்கும்! ஆனால் கௌரவத்தை இழப்பதற்கு சில கணங்களே கூடப் போதும்! அதனாலேயே நல்ல விதமான செயல்களை அதிகமாகச் செய்ய வேண்டும்! மனித வாழ்க்கை மிகவும் உயர்ந்தது! விலை மதிப்பற்றது. அதைப் போற்றிப் பாதுகாக்க மறக்கக் கூடாது! மனித ஜன்மம் என்பது சாதாரணமாகக் கிடைக்காது! நரஹ என்றால் அழியக் கூடியது! ந என்றால் இல்லை. மனித ஜன்மம் அழியக்கூடியதில்லை! என அர்த்தம்! மா நவா - மநவா என்பது மா - வா என்ற மூன்றெழுத்துக் களைக் கொண்டது! மா என்றால் இல்லை, ந என்றால் அஞ்ஞானம் வா: நடத்திச் செல்லப்படுவது!

### பிறந்த பயன்

எங்கள் நாவை உபயோகப்படுத்தி சமுதாயத்தில் நல்ல பெயரை எடுத்து, பிறந்த பயனை அடைய வேண்டும்! மனித வாழ்வு என்றும் முடியக்கூடியது! பாதுகாப்பாக இருத்தல் அவசியம்! என்றும் நிரந்தரமற்றது! நாம் உயிருடன் இருக்கும் வரை நம் பெருமையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்! வாழ்க்கையை வீணடித்து, அபகீர்த்தியை சம்பாதித்துக் கொள்ளலாகாது! ஆனந்தமயமான வாழ்க்கை வாழ வேண்டும்! இதுவே நிஜமான மார்க்கம்! என தனது உரையில் அழகுபடக் கூறியுள்ளார். நாமும் அவர் வழியைப்பின் பற்றி உயர்வு அடைவோமாக!

**தொகுப்பு**

**சனாதன சாரதி**

# நடைபெற்று முடிந்த..........

(6ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கட்சியின் முதன்மை வேட்பாளராக போட்டியிட்ட செல்லையா இராசதுரை இம்முறை 163 விருப்பு வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது. இவருக்கு கல்குடாத் தொகுதியிலிருந்து 22 வாக்குகளும், மட்டக்களப்புத் தொகுதியிலிருந்து 94 வாக்குகளும் பட்டிருப்புத் தொகுதியிலிருந்து 36 வாக்குகளும் மட்டுமே கிடைத்துள்ளது.

1994 ஆம் ஆண்டு தேர்தலில் 12583 விருப்பு வாக்குகளைப் பெற்று பிரதியமைச்சராக பதவி வகித்த எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் இம்முறைத் தேர்தலில் 22457விருப்பு வாக்குகளைப் பெற்று தோல்வியைத் தழுவியுள்ளார். இவருக்கு மட்டக்களப்புத் தொகுதியில் இருந்து 20010 வாக்குகளும் பட்டிருப்புத் தொகுதியில் இருந்து 1387 வாக்குகளும் கிடைத் திருக்கின்ற வேளை, கல்குடாத் தொகுதியிலிருந்து 738 வாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளது.

கட்சிக்குள்ளும், மட்டக்களப்பு மாவட்டத்திலுமாக இரண்டாவது அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற ஹிஸ்புல்லாஹ் 518 வாக்கு வித்தியாசத்திலேயே தோல்வியை தழுவ வேண்டி ஏற்பட்டது.

இருந்த போதிலும் 1994 ஆம் ஆண்டு தேர்தலில் பெற்றதை விட சுமார் 10,000 விருப்பு வாக்குகளை கூடுதலாகப் பெற்றி ருப்பது இவரது சேவைக்குக் கிடைத்த வெற்றியாகவே கொள்ளலாம்.

இதே போன்று முன்னாள் ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர் பஷீர் சேகுதாவூத் 1994ஆம் ஆண்டு தேர்தலில் 7932 விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்த போதிலும், இம்முறை தேர்தலில் 8652 வாக்குகளைப் பெற்று இவரும் தோல்வியையே எதிர்நோக்க வேண்டியிருந்தது. இவருக்கு மட்டக்களப்பு தொகுதியில் 7036 விருப்பு வாக்குகள் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

1994ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட முகைதீன் அப்துல் காதர் 7,619 விருப்பு வாக்குகளை மாத்திரமே பெற்றிருந்தார்.

ஆனால் இம்முறை தேர்தலின் போது தொகுதியின் ஒற்றுமைச் சின்னமாக போட்டியிடத் தீர்மானித்து தேசிய ஐக்கிய முன்னணியின் சார்பில் போட்டி யிட்டு சுமார் 22975 விருப்பு வாக்குகளைப் பெற்று மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற பெருமையைப் பெற்று வெற்றி வாய்ப்பையும் தட்டியுள்ளார்.

இம்முறை கல்குடாத் தொகுதி மக்களின் (குறிப்பாக முஸ்லிம்களின்) நீண்ட நாள் கனவாக முகைதீன் அப்துல் காதர் பாராளுமன்றம் தெரிவாகியிருப்பது அத்தொகுதியில் நிலவிய பலத்த ஒற்றுமையின் எடுத்துக்காட்டாகவே கொள்ள முடியும்.

இலருக்கு கல்குடாத் தொகுதியிலிருந்து 21815 விருப்பு வாக்குகள் கிடைத்துள்ள போதிலும் மட்டக்களப்பு தொகுதி யிலிருந்து 862 விருப்பு வாக்குகளும், பட்டிருப்புத் தொகுதி யிலிருந்து 19 விருப்பு வாக்குகளும் மட்டுமே கிடைத்துள்ளது.

பொதுவாக நோக்கின் இம்முறை நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலில் அனேகமான முஸ்லிம் வேட்பாளர்கள் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதில் முனைப்பாக ஈடுபட்டார்கள் என்பது நிதர்சனமானதாகும்.

அரசுடன் பங்காளியாக இருந்த அரசியல் கட்சிகளைச் சார்ந்த முஸ்லிம் பிரதிநிதிகள் தமிழ் மக்கள் விடயங்களில் கூடுதல் கவனம் எடுத்து அவர்களின் புனர்வாழ்வு வேலை வாய்ப்பு விடயங்களில் அவர்களுக்கு உதவி வந்த காரணங்களினால் கணிசமான அளவு தமிழ் வாக்குகளை அவா களால் பெற முடிந்தது என்று கூறலாம்.

# பிறந்த திகதி தரும்யோகம்

## ஜோதிடம் ஆக8ட-03

**08**ம் தேதிகளில் பிறந்தவர்களின் பலன்கள்:-

எண் 8 அதன் அதிபதி சனி

இளமைக் காலத்தில் பல தடைக்கற்களை தாண்டியே வரும் நிலை ஏற்படும். மற்றவர்கள் தங்களை புரிந்து கொள்ள முடியாதபடி தங்களின் செயல் பாடுகளும் இருக்கும். தங்களின் உழைபல பிறர் அனுபவிப்

உழைப்பை பிறர் அனுபவிப்பார்கள். அதனால் உழைப்பிற்கேற்ற ஊதியமும் பெற இயலாத நிலை. நம்பிக்கையே வாழ்க்கை. நம்பினோர் கெடுவதில்லை என்ற திவீர எண்ணம் கொண்டவர்கள். அதனால் எத்தனை துன்பங்கள் தொடர் கதையானாலும் அவைகளை யெல்லாம் கடந்து துணிவே துணை என்று செயலாற்றுவீகள். தீராத ஆசையுடையவர்கள். அவைகள் எளிதிலும் நிறைவேறாத நிலை. கூட்டுத்தொழில் நன்மை தராது. துன்பம் வந்த காலம் ஆன்மீகத்தில் நம்பிக்கை குறைவாகும். அதே நேரத்தில் எண்ணங்களும் எளிதில் நிறைவேறினால் எல்லாம் அவன் செயலே என எண்ணுவீர்கள். ஆன்மீக வாழ்க்கையில் நிலையான கொள்கையில்லாதவர்களே. இளமைக்கால வாழ்க்கையில் நார்த்திக வாதியாகவும் பிறகாலத்தில் ஆன்மீகத்தில் தீவிர ஈடுபாடும் கொண்டவர்கள்.

எத்துறையில் இருந்தாலும் மறைமுக எதிரிகள் நிறையவே இருப்பார்கள். உங்களை லஞ்சத்தால் வீழ்த்த எண்ணுவார்கள். அல்லது லஞ்சம் பெறச் செய்து காவல் துறையிலும் காட்டியும் கொடுப்பார்கள். அதனால் யாருடனும் கவன்மாகவே பழக வேண்டும். நாணல் போல் செயல்படுவீகள். வாழ்க்கையில் சிறு சிறு விபத்துக்களையும் சந்திக்கும் நிலை ஏற்படும். அதனால் பிறகால வாழ்க்கைக்கு பாதுகாப்பாக ஆயுள் பாதுகாப்பு செய்து கொள்வது அவசியமாகும.

உறவினர்களுடன் ஏற்படும் உறவு சுமூக்மாக இருக்கும். திருமண வாழ்க்கையும் முன் கசந்து பின் இனிக்கும். மற்றவர்களை பணவிஷயத்தில் எளிதில் ஏமாற்றி விடுவார்கள். வேலையாட்களும் எளிதில் ஏமாற்றி உங்களது செல்வத்தை கை கொண்டு விடுவார்கள். கூட்டுத் தொழில் உங்களுக்கு ஏற்றதல்ல. பாரபட்சமின்றி தண்டிக்கும் நீதிபதி, கண்டிக்கும் உபாத்தியாயர் இவர்களைப் போன்றவரே சனி. இப்பொழுது அவர் நல்லவரா, கெட்டவரா என்பது விளங்கும்.

கெட்டவரா என்பது விளங்கும்.

எப்படிப்பார்த்தாலும் இவ்வெண் அஞ்சி ஒதுங்க வேண்டியதாக இருக்கிறதேயன்றி நெருங்கி உறவாடக்கூடியதாக இல்லை. இவ்வெண் சோதனைகள் நிறைந்தது.

உடல் நிலையிலும் நிலையில்லாத நிலை சில சமயங்களில் வியாதியால் தொல்லையும் ஏற்படும். மருத்துவரால் என்ன வியாதி என்று கண்டுபிடிக்க முடியாத வியாதிகளும் தோன்றும்.

உடல் வலி அடிக்கடி ஏற்படும் டாக்டரின் ஆலோசனைப் படியே மருந்துகளை சாப்பிட வேண்டும்.

கால். கை கடுப்பு பின் காலத்தில் வாதநோயால் துன்பமும் ஏற்படும்.

4 - 8 - 13 - 17 - 22 - 26 - 31 ம் திகதிகள் எந்த ஆண்டு எந்தமாதமானாலும் யோகம் வரும் திகதிகள் ஆகும்.

உங்கள் வாழ்க்கையில் 4 - 13 - 22 - 31- 40 - 49 - 58 - 67 - 76 - 8 - 17 - 26 - 35 - 44 - 53 - 62 - 71 வயதுகளில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும்.

4 - 8 - 13 - 17 - 22 - 26 - 31- திகதிகளில் பிறந்தவர்கள் என்றும் உறுதுணையாகவும் இருப்பார்கள் வாழ்க்கைத் துணையும் இத்திகதியில் அமைந்தால் இல்லற வாழ்க்கையும் மகிழ்ச்சியாக அமையும்.

வர்ண்ணம் மஞ்சள் நிறமே சோபை அளிக்கும் நிறமாகும்.

பச்சையும், நீலமும் நன்மை தரக்கூடியன.

இரத்தினம் நீலம், நீலக்கல் அணிவதால் நல்ல அதிஷடத்தை உண்டாக்கி முடக்குவாதம். குஷடம், தோல்வியாதிகளை கட்டுப் படுத்த வல்லது.

**வே. தவராசா**

உதவி திட்டமிடல் உத்தியோகஸ்தர் திருமதி. பீ.சு. சந்திரரூபன் உட்பட 40க்கு மேற்பட்ட யுவதிகள் கலந்து கொண்டனர்.

கலந்துகொண்ட கல்விப் பணிப்பாளர்கள் தினக்கதிர் பத்திரிகையின் அதிரடித்

செய்து வைக்கப்பட்டது. இதில் மத்திய முகாம், நற்பிட்டிமுனை, கல்முனை, மருதமுனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, கல்முனைக்குடி, 12ம் கொலனி ஆகிய பிரதேச தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மகளிர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்விற்கு மாவட்ட சமூர்த்தி உதவி ஆணையாளர் இரா. நெடுஞ்செழியன், பிரதேச செயலாளர் கே. கதிர்காமநாதன் ஆகியோர் சிறப்பு அதிதியாக கலந்துகொண்டனர்.

இப்பயிற்சி நெறியானது வலயத்துக்கு உட்பட்ட சமூர்த்தி சங்கத்தலைவர்களுக்கு நடாத்தப்பட்டது.

தரவை சுட்டிக்காட்டினார்.

''போதைப் பொருள் பாவனையும், விளம்பரத்தின் தாக்கமும் மூட நம்பிக்கையும்'' என்ற தலைப்பில் பிரதேச செயலக சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். சிவபாதசேகரம் உரையாற்றுகையில்

சித்திரவேல் அவர்களும் கருத்துரை வழங்கினார்.

இந்நிகழ்விற்கு பல சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இறுதியாக சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ரி. சாந்தாதேவி நன்றியுரை வழங்கினார்.

## டெங்கு விழிப்பு வாரம்

(பழுகாமம் நிருபர்)

நாடெங்கும் பரவி வரும் டெங்கு நோய் தொடர்பான விழிப்பினை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் நோக்குடன் பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலய சாரண படையினர் இவ்வாரத்தை டெங்கு விழிப்புணர்வு வாரமாக அனுஸ்டிக்கின்றார்கள். டெங்குக் காய்ச்சல் பரவுவதால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் டெங்கு பரவக் காரணமாய் உள்ள சூழல்கள் பற்றியும் மக்கள் மத்தியில் எடுத்துக் கூறுவதோடு அது தொடர்பாக சிரமதான நிகழ்வினையும் மேற்கொள்ளவுள்ளனர்.

## மன்னார் கடற்பரப்பில் மோதல்கள் இரு படகுகள் சேதம்

மன்னார் கடற்பரப்பில் கடற்புலிகள் கடந்த திங்கட்கிழமை காலை 8 மணியளவில் நடத்திய தாக்குதலில் சிறிலங்கா கடற்படையினரின் இரு படகுகள் சேதமாகியுள்ளன என புலிகளின் குரல் வானொலி அறிவித்தது.

மன்னார் பள்ளிமுனைக் கடற்பரப்பில், நேற்றுக்காலை முக்கால் மணித்தியாலம் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் உக்கிர மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இதன்போதே இரு கடற்படைப் படகுகள் சேமாகியிருக்கின்றன.

இந்த மோதலில் விடுதலைப் புலிகளின் துணைப்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாகப் புலிகளின் குரல் வானொலி அறிவித்தது.

துணைப்படையைச் சேர்ந்த இரண்டாம் லெப்டினன் ஜெகன் என்றழைக்கப்படும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வரப்பிரகாசம் அன்ரன் சபாசனம் என்பவரே உயிரிழந்தவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நூலகத்துக்கு நிதி ஒதுக்கீடு

(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா பொதுநூலகத்திற்கு முதலாம் கட்ட வேலைக்கென 45 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 1999. 05. 24 திகதி தற்போதைய பிரதியமைச்சர் நஜீப். ஏ. மஜீதின் பங்கேற்புடன் முன்னாள் அமைச்சர் மர்ஹூம் எம். எச். எம். அஷ்ரப் இந்த நூலகத்திற்கென அடிக்கல் நாட்டினார்.

எனினும் கட்டிடம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

## சமாதான முயற்சிக்கு பாப்பரசரும் உதவ வேண்டும்

### டாக்டர் ஜயலத் ஜயவர்தன கோரிக்கை

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நோர்வேநாட்டின் மத்தியஸ்தத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ள சமாதான முயற்சிக்கு உலகின் சமாதானத் தலைவர் என்ற ரீதியில் பாப்பரசரும் தமது பங்களிப்பை நல்கி, அந்த காரியம் நிறைவேறுவதற்கு உதவ வேண்டும் என்று மகஜர் ஒன்றின் மூலம் தான் கோரியுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினராகிய டாக்டர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்தார்.

ரோமாபுரியில் நடைபெற்ற உலக நாடுகளின் கத்தோலிக்க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அங்கு சென்றிருந்த வேளை, பாப்பரசரை நேரடியாகச் சந்தித்து அந்த மகஜரைக் கையளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாப்பரசரைத் தனியாகச் சந்தித்து உரையாடும் பெரும்பேறு தமக்குக் கிடைத்ததாகவும், அதன்போது, இலங்கையில் உள்நாட்டு யுத்த நிலை காரணமாக மக்கள் குறிப்பாக வடபகுதியில் வன்னியில் உள்ள பொதுமக்கள் அனுபவித்து வருகின்ற துன்பங்கள், யுத்த நெருக்கடிகள் குறித்து அவருக்கு எடுத்துக் கூறி, நாட்டில் சமாதானம் ஏற்படுவதற்கு புனித தந்தையாரின் நல்லாசிகளும், அவரின் பங்களிப்புடன் கூடிய செயற்பாடுகளையும் வேண்டியதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## றம்ழானை முன்னிட்டு சிரமதானப் பணிகள்

(நற்பிட்டிமுனை நிருபர்)

எதிர்வரும் றம்ழான் புனித நோன்பை முன்னிட்டு முஸ்லிம் லிக் வாலிப முன்னணியினர் நற்பிட்டிமுனை ஜும்மா பெரிய பள்ளிவாயலில்

எதிர்வரும் 25ம் திகதி சனிக்கிழமை மு. ப 10.00 மணி தொடக்கம் பி. ப வரை பல சிரமதான வேலைகளில் ஈடுபடவுள்ளதாக அதன் செயலாளர் முஜாஹித் ஏ. சதார் தெரிவித்தார்.

## எயிட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கு

மட்டக்களப்பு சுதந்திர மனித அபிவிருத்தி கழகம் உலக எயிட்ஸ் தினமான டிசம்பர் முதலாம் திகதியினை முன்னிட்டு எயிட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்குகளையும் துண்டு பிரசுரங்களையும் வெளியிட மாவட்ட ரீதியாக நடைமுறைப்படுத்துவதற்கு பல முன் ஆயத்தங்களை ஏற்பாடு செய்துவருகின்றது.

மட்டக்களப்பில் மாவட்ட ரீதியாக நான்கு வருடங்களாக உலக எயிட்ஸ் தினத்தினை முன்னிட்டு மட்/ சுதந்திர மனித அபிவிருத்தி கழகமானது மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்குடன் கருத்தரங்குகளையும், எயிடஸ் நோய் பற்றிய துண்டு பிரசுரங்களையும் பூரணமான விளக்கத்துடன் மக்கள் மத்தியில் விநியோகித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## கல்முனைப் பிரதேச "தினக்கதிர்" மகளிர் வாசகர் வட்டம் அங்குரார்ப்பணம்

(மருதமுனை நிருபர்)

பிரதேசங்கள் தோறும் "தினக்கதிர்" வாசகர் வட்டங்களை உருவாக்கும் வரிசையில் கல்முனைப் பிரதேச மகளிர்களிடையே இன உறவினையும், ஐக்கியத்தையும், பிரதேச ஒருமைப்பாட்டுடனும் பேணுவதோடு மகளிர் மத்தியில் புதைந்து கிடக்கின்ற எழுத்தாற்றல்களை "தினக்கதிர்" பத்திரிகையினூடாக மிளிரச் செய்து ஊடகத்துறையில் ஊக்கமுள்ள உன்னதமான மகளிர் அணியினை தோற்றுவிக்கும் நன்நோக்குடன் கல்முனைப் பிரதேச "தினக்கதிர்" மகளிர் வாசகர் வட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்படுவதாக கல்முனைப் பிராந்திய தினக்கதிர் வாசகர் வட்ட அமைப்பாளர் ஜனாப். நழீம் எம்.பதுார்தீன் தனது தலைமையுரையில் சுட்டிக்காட்டிப் பேசினார்.

கல்முனை உவெஸ்லி உயர்தரப்பாடசாலை மண்டபத்தில் ஜனாப். நழீம் எம். பதுார்தீன் அவர்கள் தலைமையில் 11.11.2000 இல் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் அல் ஹாஜ் யூ.எல்.அலியார், ஆரம்பக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ். இஸட். எம்.நதீர், நிந்தவூர் கோட்டக்கல்விப் பணிப்பாளரும் தினகரன், தினக்கதிர், பத்திரிகை நிருபருமான அல் ஹாஜ். ஏ.எல்.எம். அமீன், கல்முனை வலயக்கல்வி அலுவலக முறைசாரக் கல்விப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ஹுசைபின்,

### 11.11.2000 ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட கல்முனைப் பிரதேச தினக்கதிர் மகளிர் வாசகர் வட்டம்.

**ஸ்தாபகரும் அமைப்பாளரும்** : நழீம் எம்.பதுார்தீன்.

**காப்பாளர்களும் ஆலோசகர் குழுவும் :** அல்ஹாஜ்.யூ.எல்.அலியார் - பிரதிக்கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், கல்முனை. அல்ஹாஜ்.ஏ.எல்.எம்.அமீன் - கோட்டைக்கல்விப் பணிப்பாளர், நிந்தவூர். அல்ஹாஜ்.இஸட்.எம்.நதீர் - உதவிக்கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், கல்முனை ஜனாப்.ஏ.எம்.ஹுசைன் உதவிக்கல்விப்பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், கல்முனை. திருமதி.பீ.சு.சந்திரரூபன், உதவித்திட்டமிடல் உத்தியோகஸ்தர், வலயக்கல்வி அலுவலகம், தலைவர்: திருமதி.இஸட்.சித்தி சல்மா உபதலைவர்: திருமதி.ஏ.ஆர்.தஸ்லீமா இணைச்செயலாளர்கள்: திருமதி. இராஜேஸ்வரி தட்சணாமூர்த்தி செல்வி.எஸ்.எச்.நூபியா பொருளாளர்: திருமதி.ஏ.எல்.நசீரா- செயற்குழு உறுப்பினர்கள்: 1.எம்.சி.நாவாஸியா 2.அஞ்சுலா சுபோஜினி 3. ஏ.றிசானா 4.பி.எம்.காமிலா 5. ஏ.எஸ்.றிஹானா 6. தில்லை நாயகி 7. கே.மீனாம்பிகை 8. ஆர்.ஜி.நியோமி 9. வீ.மதிவதனி 10. வை.ஆசிரியர்

தலைப்புக்களையும் அச்சமின்றி உண்மைச் செய்திகளை வெளியிடும் தன்மையையும் பெரிதும் பாராட்டியதோடு ஜனாப்.நழீம் எம்.பதுார்தீன் அவர்களின் இதுபோன்ற சமூகத்தின் மேம்பாட்டுக்கு தன்னை அர்ப்பணித்துவரும் சமூகப் பணிகள் பற்றியும் பாராட்டிப்பேசினார்.

தங்களால் முன்வைக்கப்படுகின்ற ஆக்கங்களை பிரசுரிக்க தினக்கதிர் அலுவலகமும் தாங்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மகளிர் வாசக வட்ட அங்கத்தவர்கள் அமைப்பாளர் ஜனாப். பதுார்தீன் அவர்களைக் கேட்டுக் கொண்டதோடு எதிர்காலத்தில் ஆக்கபூர்வமான பல நடவடிக்கைகள் எடுக்கவிருப்பதாகவும் கூறினர். சுற்றில் வாசகர் வட்டம் அங்குரார்ப்பணம்

## வெள்ளப்பெருக்கினால் போக்குவரத்து ஸ்தம்பிதம்

(பழுகாமம் நிருபர்)

கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் பலத்த மழை காரணமாக போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மண்டூர், வெள்ளாவெளி, கோவில் போரதீவு, பொறுகாமம், பெரிய போரதீவு பழுகாமம், முனைத்தீவு, போன்ற கிராமங்களும் நீரில் மூழ்கியுள்ளன. நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறியுள்ளனர்.

இதனிடையே பட்டிருப்புப் பாலமூடாக பெரிய போரதீவு, பழுகாமம், போன்ற கிராமங்களுக்கான பிரதான வீதி வெள்ளத்துள் மூழ்கியுள்ளது. போக்குவரத்து இதன் காரணமாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. இதனால் களுவாஞ்சிக்குடிக்கும் தூர இடங்களுக்கும் புறப்பட்டுச் சென்ற பொதுமக்கள் வெள்ளப் பெருக்கு காரணமாக பயணத்தை தொடர முடியாமல் திரும்பிச் சென்றதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

## தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ஓய்வு

(நமது நிருபர்)

சம்மாந்துறை தொழில்நுட்பக்கல்லூரியைச் சேர்ந்த அதிபர் எம்.எச்.முகம்மது ஆதம் டிசம்பர் 16ம் திகதி முதல் ஓய்வு பெறுகின்றார். தொழில்நுட்பக்கல்லூரியின் அபிவிருத்திக்காக பல உயரிய பணிகளை ஆற்றியுள்ள இவர் கல்முனையைச் சேர்ந்தவர்.

## போதைப் பொருள் பாவனை நிவாரணப் பயிற்சி

(நிருபர் ஆர். லோகேஸ்)

சமூர்த்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் மண்முனை வடக்கு பிரதேச செயலகம் பிரிவின் சமூர்த்தி வலயம் I இல் ''போதைப் பொருள் பாவனை நிவாரண பயிற்சி நெறி'' கருத்தரங்கு அண்மையில் மட்/விவேகானந்தா மகளிர் மகாவித்தியாலயத்தில் யோசப் பரராஜசிங்கம் கலையரங்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சி கருத்தரங்கு வலய முகாமையாளர் திருமதி பத்மா ஜெயராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

''போதைப்பொருள் பாவித்தல் வறுமைக்கு ஏதுவான காரணமாகும் (பொருளாதார ரீதியில்) என்ற தலைப்பில் மாவட்ட செயலக சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. டி. ஆர். லூயிஸ் அவர்கள் உரையாற்றுகையில்

வறுமைக்கு அடிப்படைக் காரணமாக அமைவது போதைப் பொருள் பாவனை ஆகும் அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஆண்டு மாத்திரம் 340 கோடி ரூபா புகைத்தலுக்கு செலவு செய்யப்பட்டிருக்கும்

போதைப் பொருள் பாவனை அதிகரிப்பிற்கும் கவர்ச்சி மிகு விளம்பரங்களும் காரணமாகும். அத்துடன் இவ்விளம்பரங்களில் நேரடி மறைமுக விளம்பரங்களும் காரணமாகும். என்று கூறினார்.

''போதைப்பொருள் பாவனையில் இருந்து விடுவித்தல்' என்ற தலைப்பில் சுகாதார போதனாசிரியர் திருமதி சிவரதி அவர்களும், ''போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் விளைவுகள்'' என்ற தலைப்பில் சுகாதார போதனாசிரியர் கே.

# நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தல் ஒரு நோக்கு

(நேற்றைய தொடர்ச்சி).......................

கடந்த 1994ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய தமிழர் விடுதலைக் கூட்டணி, இம்முறை தேர்தலில் கூடுதலான மக்களது ஆதரவுகளைப் பெறத்தவறியதனாலேயே, இம் முறை பொதுஜன ஐக்கிய

### ஐக்கிய தேசியக் கட்சி:-

வேட்பாளராகப் போட்டியிட்ட அலிஸாஹிர் மௌலானாவுக்கு இம்முறை 14284 விருப்பு வாக்குகள் கிடைத்துள்ளது. 1994 ஆம் ஆண்டு பெற்றதை விட சுமார் 3000 விருப்பு வாக்குகளை கூடுதலாகப் பெற்று மீண்டும் பாராளுமன்றம் தெரிவாகியுள்ளார். இது இவரது சமூக சேவைக்கும், தன்னலமற்ற

| வேட்பாளர்களின் பெயர்கள் | 1994 | | 2000 | |
|---|---|---|---|---|
| கிடைத்த வாக்கு | % வாக்கு | கிடைத்த % | | |
| முகைதீன் அப்துல் காதர் | 7,619 | 25.98 | — | — |
| அலிஸாஹிர் மௌலானா | 11508 | 39.18 14284 | | 40.63 |
| சத்தியமூர்த்தி ராஜன் 2002 | 6.82 | 7570 | 21.54 | |

முன்னணிக்கு ஒரு ஆசனம் கிடைத்துள்ளது என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றார்கள்.

1994 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலை விட இம்முறை

எம்.எஸ்.முகம்மது றூமி

நடைபெற்ற தேர்தலில் ஐ.தே. கட்சிக்கு வெற்றியே கிடைத்துள்ளது. 1994 இல் மொத்தமாக 23244 வாக்குகளைப் பெற்ற ஐ.தே.கட்சி இம்முறை 29165 வாக்குகளைப் பெற்றுள்ளது. சுமார் 6000 வாக்குகளை கூடுதலாகப் பெற்றுள்ளது.

இதன் முதன்மை

சிறந்த மனப்பாங்குக்கும் கிடைத்த வெற்றி என்றே கூற முடியும். இவருக்கு அதிகப் ப்டியான விருப்புவாக்காக மட்டக்களப்புத் தொகுதியிலிருந்து 10991 வாக்குகள் கிடைத்துள்ளது.

இதே வேளை சத்தியமூர்த்தி ராஜனுக்கு 1994 இல் கிடைத்த விருப்பு வாக்குகள் 2002மட்டுமே. ஆனால் இம்முறைய தேர்தலில் 7570 விருப்பு வாக்குகள் கிடைத்துள்ளது. இதே நேரம் இவர் கடந்த 1994ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின் கைது செய்யப்பட்டு சிறையில் சில நாட்கள் இருந்தது குறிப்பிடத்

தக்கது. இதுவும் இவரது வாக்கு வங்கி அதிகரிப்புக்கான ஒரு காரமாக இருக்குமென்று பொது மக்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

கடந்த 1994 ஆம் ஆண்டு 310 72 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தைப் பெற்ற சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இம்முறைத் தேர்தலில் தேசியஐக்கிய முன்னணி என்ற பெயரில் போட்டியிட்டு மாவட்டத்திலேயே இரண்டாவது இடத்தினை பெற்றதுடன் 53 646 வாக்குகளைப்பெற்று இம்முறையும் ஒரு ஆசனத்தை மட்டுமே பெற்றுள்ளது.

இந்தளவு தேசிய ஐக்கிய முன்னணிக்கு

| சில வேட்பாளர்களின் பெயர்கள் | 1994 | | 2000 | |
|---|---|---|---|---|
| | கிடைத்த வாக்கு | % | கிடைத்த வாக்கு | % |
| அலிமுகமட் ஹிஸ்புல்லாஹ் | 12583 | 31.23 | 22457 | 38.36 |
| பசீர் சேகுதாவூத் | 7932 | 19.69 | 8652 | 14.78 |
| முகைதீன் அப்துல் காதர் | - | - | 22975 | 39.25 |
| செல்லையா இராசதுரை | - | - | 163 | 0.28 |

கிடைத்த கூடுதலான வாக்குகள் கல்குடாத் தொகுதி முஸ்லிம்கள் இம்முறை தமது மண்ணில் இருந்து

ஒரு பிரதி நிதி தெரிவுசெய்யப்பட வேண்டும் என்ற நோக்கில் ஒற்றுமையாக செயற்பட்டதன் மூலம் கிடைத்த வெற்றி என்றுதான் அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

மாவட்டத்தில் முதன்மை கட்சியாக திகழும் தமிழர் விடுதலைக்கூட்டணி இதனை விட 802 வாக்குகளையே கூடுதலாகப் பெற்றிருக்கிறது.தேசிய ஐக்கிய முன்னணிக்கு 802 வாக்குகளுக்கு கூடுதலாக கிடைத்திருந்தால் முடிவுகள் மாறி அமைந்திருக்கும்.

இக் கட்சியின் முதன்மை வேட்பாளராக போட்டியிட்ட செல்லையா இராசதுரை அம் முறை 163 விருப்பு வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவருக்கு

(4ம் பக்கம் பார்க்க)

## கருத்தரங்கு
### இது உங்கள் பக்கம்

மீண்டும் கருத்தரங்கு இப்பகுதியில் ஆரம்பமாகியிருக்கிறது. தேர்தலுக்குப் பின் மக்கள் பிரதிநிதிகளிடம் எதிர் பார்க்கும் தேவைகள், அரசியல் நிலைமை நோர்வேயின் சமாதான முயற்சிகள் போன்ற பல விஷயங்களில் வாசக நேயர்கள் தங்கள் கருத்துக்களை இப்பகுதியில் வெளியிட வாய்ப்பளித்திருக்கிறோம். இனி இது உங்கள் பக்கம்.

ஆசிரியர்

| அங்கீகரிக்கப்பட்ட கட்சி சுயேட்சை குழு | பெற்ற வாக்குகள் | 5% | உறுப்பினர் தெரிவுக்கு தகுதியான வாக்குகள் | உறுப்பினர் ஒருவருக்கான மொத்த வாக்கு | மேலதிக ஆசன ஒதுக்கீடு | முதலாவது தெரிவு | தெரிவில் இருந்து மீதியான வாக்குகள் | இரண்டாவது தெரிவு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1994 ஆம் ஆண்டு தேர்தல்** | | | | | | | | | |
| | 4802 | | - | | | | | - | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 23244 | | 23244 | | | | 23244 | 1 | 1 |
| | 17073 | | 17073 | | | | 17073 | - | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 76516 | 8704 | 76516 | 41796 | 1 | 1 | 24720 | 1 | 3 |
| பொது ஜன ஐக்கிய முன்னணி | 19278 | | 19278 | | | | 19278 | - | - |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 31072 | | 31072 | | | | 31072 | 1 | 1 |
| சுயேச்சை குழு-1 | 1547 | | - | | | | | | |
| சுயேச்சை குழு-2 | 556 | | - | | | | | | |
| மொத்தம் | | | | | 1 | 1 | | 3 | 5 |
| **2000 ஆம் ஆண்டு தேர்தல்** | | | | | | | | | |
| ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி | 3325 | | - | | | | | | |
| ஐக்கிய தேசியக் கட்சி | 29165 | | 29165 | | | - | 29165 | 1 | 1 |
| மக்கள் விடுதலை முன்னணி | 295 | | - | | | | | | |
| தேசிய ஐக்கிய முன்னணி | 53646 | | 53646 | | - | 1 | 15204 | - | 1 |
| தமிழ் ஈழ விடுதலை இயக்கம் | 3909 | | - | | | | | | |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 54448 | | 54448 | | 1 | 1 | 16006 | - | 2 |
| பிரஜைகள் முன்னணி | 1938 | | - | | | | | | |
| பொது ஜன ஐக்கிய முன்னணி | 16510 | | 16510 | | | - | 16510 | 1 | 1 |
| ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னனி | 84 | | - | | | | | | |
| ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி | 9030 | | - | | | | | | |
| ஜனநாயக இடது சாரி முன்னணி | 113 | | - | | | | | | |
| ருகுணு ஜனநாயக கட்சி | 35 | 9322 | - | 38412 | | | | | |
| லிபரல் கட்சி | 177 | | - | | | | | | |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 6968 | | - | | | | | | |
| சிகல உறுமய | 135 | | - | | | | | | |
| சிங்கள மகா சம்பத பூமி பூத்தி பக்சய | 92 | | - | | | | | | |
| சுயேட்சை குழு-1 | 5556 | | - | | | | | | |
| சுயேட்சை குழு-2 | 240 | | - | | | | | | |
| சுயேட்சை குழு-3 | 589 | | - | | | | | | |
| சுயேட்சை குழு-4 | 43 | | - | | | | | | |
| சுயேட்சை குழு-5 | 143 | | - | | | | | | |
| மொத்தம் | 186441 | | 153769 | | 1 | 2 | 76885 | 2 | 5 |




## சாதனை வீரர் முரளிதரனின் அன்னையுடன் ஒரு சில நிமிடங்கள்

(பேட்டி:- சாயிராஜன்.சுதர்ஷன்)

இன்று சர்வதேச கிரிக்கட் அரங்கில் மிக முக்கியமாகப் பேசப்படுபவர்களில் சுழல் பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரனும் ஒருவரா வார். இன்றைய காலகட்டத் தில் உலகின் சிறந்த முதல் தர பந்து வீச்சாளராகவும் திகழ்கிறார். இவர் 1992ம் ஆண்டு அவுஸ்திரேலியாவிற்கு எதிரான போட்டியின் போது சர்வதேச கிரிக்கட் போட்டியில் அறிமுகப்படுத்தப் பட்டார். வலது கை சுழல் பந்து வீச்சாளரான முரளிதரன் பல சாதனைகளை ஏற்படுத்தி உள்ளார். அதில், ஒரு நாள் சர்வதேச போட்டி ஒன்றில் அதிக விக்கட்டுக்களை வீழ்த்திய சாதனையை அண்மையில் சார்ஜாவில் ஏற்படுத்தியது நாம் அனைவரும் அறிந்ததே. இந்த சாதனை வீரரின் தாயாரிடம் தொடர்பு கொண்டு முரளிதரன் பற்றி நாம் கேட்ட போது எதுவித மறுப்புமின்றி அவரைப் பற்றி பல சுவையான தகவல்களை வழங்கியமைக்கு முதற்கண் முரளிதரனின் தாயாருக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். முரளி பற்றி அவரது தாயார் வழங்கிய தகவல்கள் இதோ:-

**முரளிதரனின் குடும்ப விபரம் பற்றி.........**

எனக்கு மொத்தம் நான்கு ஆண் பிள்ளைகள் இருக்கின்றனர். எனது பிள்ளைகளின் பெயர்கள் முறையே முரளிதரன், சிறிதரன், சசிதரன், பிரபாகரன். சிறிதரன் இங்கிலாந்தில் டிப்ளோமா முடித்து விட்டார். மற்றைய இருவரும் வியாபாரத்தை கவனித்து வருகின்றனர்.

**முரளியின் இளமைப் பருவம் பற்றி............**

ஆரம்ப காலத்தில் முரளிதரன் படிப்பினில் மிகவும் ஆர்வம் கூடியவராக இருந்தார். முரளிதரன் வகுப்பில் முதலாம் பிள்ளையாகவும் திகழ்ந்தார். ஒன்பது வயதுக்குப் பின்னர் முரளி விளையாட்டில் ஆர்வம் காட்டத் தொடங்கினார். அவரது ஆர்வம் மிகுதி காரணமாக விளையாட்டில் ஈடுபட நான் அவருக்கு ஊக்கமளித்தேன். அவரது ஆரம்ப கால பயிற்றுவிப்பாளராக சுனில் பெனான்டோவே இருந்தார். அவரின் அபார திறமை காரணமாக 15 வயதிற்கு உட்பட்டோர் அணியில் இடம் பிடித்தார். அவர் படிக்கும் காலத்தில் கல்லூரி விடுதியில் தங்கியிருந்தே பயிற்சி பெற்றார்.

**முரளியின் பந்து வீச்சு முறைகேடானது என்று கூறப்பட்டபோது உங்கள் மனநிலை............**

முரளி நன்றாக பந்து வீசிக் கொண்டு இருந்த போது குறை கண்டது மிகவும் கவலையாக இருந்தது. அது சிலர் செய்த சதி என நான் நினைக்கிறேன். அவர் பந்து வீச்சில் எந்தக் குறையும் இல்லை என நான் முழுமையாக நம்பினேன். அவர் பந்து வீச்சில் குறை இல்லை என கிரிக்கட் வீரர்கள் பலர் கூறியது மனதுக்கு ஆறுதல் தந்தது.

**முரளியின் பந்து வீச்சில் குறை கண்ட போது அதை எதிர்த்து ஊடகத்துறைகள் குரல் கொடுத்தது பற்றி....**

ஊடகத்துறைகள் வழங்கிய ஆதரவுக்கு நான் என் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

**முரளி தன் இலட்சியம் என அடிக்கடி கூறுவது..........**

நிறைய விக்கட்டுக்கள் எடுக்க வேண்டும். சாதனைகள் படைக்க வேண்டும் என கூறுவார். அவர் அதிகமாக அலட்டிக் கொள்ளமாட்டார். அமைதியாகவே இருப்பார். அணியின் வெற்றிக்கு பாடுபட வேண்டும் எனவும் கூறுவார்.

**முரளி சாதனை படைத்த போது உங்கள் மன நிலை..........**

முரளி சாதனை படைத்த போது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அனைவரும் முரளியின் பெற்றோர்கள் இவர்கள் என கூறும் போது எனக்கு மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் உள்ளது.

**இறுதியாக முரளியின் திருமணம் பற்றி...........**

தனக்கு தற்போதைக்கு திருமணம் வேண்டாம் என கூறினார். தான் நிறைய சாதிக்க வேண்டும் அதன் பிறகு திருமணம் செய்யலாம் என்கிறார்.

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றோர்



கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரி(தேசிய பாடசாலையில்) கல்வி பயிலும் செல்வி.உ.பாத்திமா மினோசா இவ்வருடம் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்துள்ளார்.

இவர் நற்பிட்டிமுனையைச் சேர்ந்த முகைதீன் பிச்சை உபைத்துல்லாஹ், காசீம் பாவா நைலூபர் (ஆசிரியை) தம்பதிகளின் புதல்வி ஆவார்.



மட்டக்களப்பு புனித மிக்கேல் தேசியப்பாடசாலை மாணவரான தங்கராஜா டினேஸ்காந்தன் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 151 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் 10 வயதுப் பிரிவில் டென்னிஸ் போட்டியில் சம்பியன் பட்டத்தைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவும் சிம்பாவேயும் மோதுகின்றன.

(பிரகாஸ்)

இந்திய அணிக்கும் சிம்பாவே அணிக்கும் எதிர்வரும் சனிக்கிழமை பரிடபாத் மைதானத்தில் இரண்டு டெஸ்ட் போட்டிகளும் ஐந்து ஒரு நாள் போட்டிகளும் நடைபெறவுள்ளன. இப்போட்டியில் இந்திய அணிக்கு இரு புதுமுக வீரர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பெயர் விபரம் பின்வருமாறு:-

விஜயாவிட் சுழல் பந்து வீச்சாளர் சுனில்யோசி இவர்கள்(புதிய வீரர்கள்)

சௌரவ்கங்குலி(அணித்தலைவர்), சடகோபன் ரமேஸ், சிப்தந்தாதாஸ், ராகுல் ராவிட், சச்சின் டெண்டுல்கர், வெங்கி பிரபு லக்ஸ்மன், யுவராஜ் சிங், விஜயாகிட் (விக்கட் காப்பாளர்), அஜித் அகார்க்கார், சுனில் ஜோசி, ஜகவல் ஸ்ரீநாத், முரளிகார்த்திக், சகீர்கான், சான்பிசிங் ஆகியோர் இடம் பெறுகின்றனர். சுனில் யோசி இருக்கும் வரை எந்த வித ஐயமுமில்லை என்றும் இப்போட்டியில் நாம் வெற்றி பெறுவோம் எனவும் இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலி கருத்து தெரிவித்துள்ளார்.

## பாலமுனையில் சாரணர் பாசறை

(முபா)

பாலமுனை மின்ஹாஜ் மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 24,25,26ம் திகதிகளில் மூன்று நாள் சாரணர் பாசறை ஒன்று இடம் பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இப்பாசறையில் 10 பாடசாலைகளின் சாரணர்கள் பங்குபற்றுவர். உதவி மாவட்ட சாரணிய ஆணையாளர் எம்.ஐ.எம்.முஸ்தபா இப்பாசறையின் தலைவராக கடமையாற்றுவார். சாரணிய ஆசிரியர்களான எம்.எஸ்.பி.அருஸ், எம்.றினோஸ் ஆகியோர் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர். இப்பாசறையில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் உடன் உதவி மாவட்ட ஆணையாளரோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# வாசகர் நெஞ்சம்

## தேர்தல் அலுவலகத்தின் அலட்சியப்போக்கு!

கடந்த அக்டோபர் மாதம் 10ம் திகதி நடைபெற்ற 11வது பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது சகல வாக்கெடுப்பு நிலைய, ஒழுங்குகள் யாவற்றையும் கிராம உத்தியோகத்தர்களே மேற்கொண்டிருந்தனர்.

இதற்கென மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தேர்தல் அலுவலகம் இக்கிராம உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் எதையும் வழங்கியிருக்கவில்லை. கிராம உத்தியோகத்தர்கள் தமது சொந்தப்பணத்தைச் செலவு செய்தே சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு தேர்தல் எவ்வித இடையூறுமின்றி நடைபெற வழி செய்திருந்தனர்.

ஆனால் மட்டக்களப்பு தேர்தல் அலுவலகம் இன்று வரை இவர்களுக்குரிய கொடுப்பனவை வழங்காதிருப்பதுடன் மிகுந்த அலட்சியப் போக்கையே கடைப்பிடித்து வருகிறதென கிராம உத்தியோகத்தர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஏனைய ஊழியர்களுக்கு இப்பணம் வழங்கப்பட்டிருந்தும் கிராம உத்தியோகத்தர்களுக்கு இக் கொடுப்பனவை வழங்காதது குறித்து அரசாங்க அதிபரிடம் முறையீடு செய்துள்ளதாகக் கிராம உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் இவர்களுக்கான கொடுப்பனவை காலம் தாழ்த்தாது வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*அனுதாபி*
*மட்டக்களப்பு*

## எண்ணெய் விலையேற்றம் எவ்வகையில் நியாயமானது?

மண்ணெண்ணெயின் விலை அதிகரிக்கப்பட்டது சகலரும் அறிந்ததே. இவ்வாறு மண்ணெண்ணெயின் விலை லீற்றருக்கு ரூபா 1.40 ஆக உயர்த்தப்பட்டது. ஆனால் எரிபொருள் நிலையங்களில் ரூபா 2.00 ஆக உயர்த்தப்பட்டுள்ளன. அதாவது முன்னைய விலை 16.00 ரூபா. ஆனால் தற்பொழுது விற்க வேண்டிய விலை 17.40.சதம். தற்பொழுது விற்கின்ற விலை ரூபாய் 18.00 ஆகும். எனவே இந்த விலை எந்த விதத்தில் உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு திடீர் திடீரென அதிகரிக்கின்ற விலையினால் மக்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர். அரசு ஒரு விலையினை நிர்ணயிக்க விற்பனை நிலையங்கள் அவ்விலையினை விட அதிக விலையில் விற்பனை செய்வது எந்த விதத்தில் நியாயமானது?

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு தினக்கதிர் பத்திரிகையினூடாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

கி.கிருபா
ஆரையம்பதி

## கிண்ணியாவில் நாய்களின் தொல்லை!

கிண்ணியாப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை வெகுவாக அதிகரித்து வருகின்றது. இதனால் பொது மக்கள் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

எனவே, நாய்களை ஒழிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

*ஏ.சி.மொகமட் முஸில்*
*கிண்ணியா*

## முள்ளிப் பொத்தானை இருளில்!

தம்பலகாமப் பிரதேசத்தின் முள்ளிப்பொத்தானையிலுள்ள மின் மாற்றி ஒன்று கடந்த வெள்ளிக் கிழமை சேதமாகியதால் முள்ளிப் பொத்தானை, ஜின்னா நகர் போன்ற பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன.

இது மாணவர்களின் பரீட்சைக் காலமாதலால் புதிய மின்மாற்றியொன்றைப் பொருத்துமாறு இலங்கை மின்சார சபையினரையும், பாதுகாப்புத் தரப்பினரையும் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் கேட்டுள்ளார். எனவே துரித கதியில் மின்மாற்றியை அமைத்துத்தருமாறு வேண்டுகிறேன்.

*கிண்ணியா மொகமட்*

# வெள்ளத்துடன் ஊடுருவி வந்த பன்றிகள்

# மக்களை தாக்கி 13 பேர் ஆஸ்பத்திரியில்

(ச. நல்லரெட்ணம், அரியம்)

**காட்டுப்பன்றிகள் தாக்கியதில் பதின்மூன்று பேர் ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.**

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கை அடுத்து ஏறாவூர் பற்று செயலக பிரிவுக்குட்பட்ட வயற் பிரதேசங்களில் இருந்து வந்தாறுமூலை,மாவடி வேம்பு,சித்தாண்டி,ஆகிய கிராமங்களில் இடம் பெயர்ந்துள்ள காட்டுப்பன்றிகள் பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டதில் கடந்த சில தினங்களாக ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக காட்டுப் பன்றிகள் ஊர் பகுதிக்குள் வந்துள்ளன.

இவ்வாறு வந்த பன்றிகள் வந்தாறுமூலை பகுதியில் உள்ள சுமார் பதிமூன்று பொதுமக்களை வெட்டியுள் ளது வெட்டப்பட்ட பதின்மூன்று பேரும் ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளன,

கடந்த 20ம் திகதி வந்தாறுமூலையில் ஐந்து பேர் பன்றி வெட்டியதால் ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் 21ம் திகதி மூன்று பேரும் நேற்று ஐந்து பேருமாக இதுவரை பதின்மூன்று பேர் பன்றியின் கொம்பு குத்தியதால் ஏற்பட்ட காயங்களுடன் ஏறாவூர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு ள்ளனர்.

வெள்ளம் காரணமாக காட்டுப் பன்றிகள் இவ்வாறு வந்தாறுமூலை செங்கலடி, கொம்மாதுறை,போன்ற பகுதிகளில் ஊடுருவி உள்ளன.

பொது மக்கள் இப் பன்றிகளுக்கு பயந்து இடம் பெயரும் நிலை ஏற்பட்டுள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இப்பன்றிகளினால் பொது மக்களின் வீட்டுத் தோட்டச் செய்கைகளும் பாதிக்கப்படும் நிலையில் உள்ளது.

இதேவேளை கடந்த திங்கட்கிழமை வந்தாறுமூலை, கொம்மாதுறை, பகுதிகளில் இராணுவத்தினர் சுமார் பத்து பன்றிகள் சுட்டப்பட்டுள்ளது இதை விட இப்பகுதி மக்களாலும் நேற்று முன்தினம் சில அடித்துக் கொல்லப்பட்டதுடன் ஒரு பன்றி இருநூறு ரூபாவுக்கு விற்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## ஒன்பது மாதம் சிறையிலிருந்த இரு இளைஞர்கள் விடுதலை

(சே.பங்கயற்செல்வன்)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து கடந்த 09 மாதங்களாக மட்டக்களப்பு, களுத்துறை சிறைச்சாலைகளில் தடுத்த வைக்கப்பட்டிருந்த இரு இளைஞர்களை மட்டக்களப்பு மேலதிக நீதவான் அப்துல் கபூர் அண்மையில் விடுதலை செய்தார். சந்திவெளியைச் சேர்ந்த கனகரெட்னம் தேவகுமார், மஞ்சந்தொடுவாயைச் சேர்ந்த தெய்வநாயகம் ஜெயநாதன் ஆகியோரே விடுதலை செய்யப்பட்டவர்கள்.

கனகரெட்னம் தேவகுமாரை சந்தேகத்தின் பேரில் கடந்த பெப்ரவரி மாதம் 05ம் திகதி ராசிக்குழுவினர் கைது செய்தனர். தெ.யெநாதன் என்பவரை சந்தேகத்தின் பேரில் கடந்த மார்ச் மாதம் 25ம் திகதி மட்டக்களப்பு இராணுவ புலனாய்வு பிரிவினர் கைது செய்தனர். பின்னர் தொடர் விசாரணைக்காக அரசதரப்பினர் இவ்விருவயையும் மட்டக்களப்பு நாசகாரத் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைத்தனர். அதன் பின்னர் கடந்த 09 மாதங்களாக மட்டக்களப்பு களுத்துறை சிறைச்சாலைகளில் மேற்கூறிய எதிரிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வழக்கு விசாரணைகள் அண்மையில் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்றன. அப்போது குறித்த எதிரிகளுக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு போதிய ஆதாரம் இல்லை என சட்டமா திணைக்களமொன்று அறிவித்ததன் பிரகாரம் எதிரிகளை நீதவான் விடுதலை செய்தார். எதிரிகள் தரப்பில் மனித உரிமை இல்லச் சட்டத்தரணி என்.சிவானந்தராஜா ஆஜராகியிருந்தார்.

## யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

(யாழ்நிருபர்)

யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.

பிந்துனுவெவபுனர் வாழ்வு முகாம் படுகொலை, யாழ் பத்திரிக்கையாளர் நிமலராஜன் படுகொலையை கண்டித்தும் யாழ் கடலேரியில் மீன் பிடி தடையை நீக்க்கோரியும் மாணவர்கள் ஒன்றியம் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை நட்த்தியுள்ளனர்.

நேற்று காலை பத்து ம்ணியளவில் பல்கலைகழகத்தில் இருந்து ஆரம்பித்த ஆர்ப்பாட்ட மாணவர்கள் யாழ் கச்சேரியை சென்றடைந்தனர்.அங்கு யாழ் அரச அதிபரிடம் மகஜர் ஒன்றினையும் கையளித்தனர்.

## தாமரைக்கேணி சாயி இல்லத்தில் பகவானின் அவதாரதின விழா

(நமது நிருபர்)

மட்டக்களப்பு தாமரைக் கேணியிலுள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தினர் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 75வது அவதார தினவிழாவை இன்று சாயி இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றனர்.

காலை 5.30 மணிக்கு ஓங்காரம் ஸுப்பிரவாதம் நகரசங் கீர்த்தனம் இடம்பெறும் 6.45 மணிக்கு மங்கள ஆராத்தி நடைபெறுதலுடன் காலை நிகழ்ச்சிகள் நிறைவுபெறும்.

மாலை நிகழ்வுகளாக மட்/மகாஜன கல்லூரி பிரதான மண்டபத்தில் பி.ப 3 மணிக்கு சாயி நிலையத் தலைவர் எஸ்.கிருஷ்ணராஜா பிரசாந்தி கொடியை ஏற்றி வைக்க ஓங்காரம் அஸ்டோத்திர பூசையும் அதனைத் தொடர்ந்து உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணராஜாவின் தலைமை உரையும் புட்டப்பத்தி பிரயாண அனுபவங்கள் என்னும் தலைப்பில் எஸ் விநாயகமூர்த்தியின் பேச்சு இடம் பெறும். அதனைத் தொடர்ந்து எஸ்ரவியின் சிறப்புச் சொற்பொழிவும் பஜனை, காலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவு ள்ளதாக பகவான் ஸ்ரீ சத்தியசாயி நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

## கல்முனையில் டெங்கு நோய் எதிர்ப்பு நடவடிக்கை

(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை நகர சபை, சுகாதார வைத்திய அதிகாரி, டெங்கு ஒழிப்பு திட்ட செயற்குழு ஆகியன ஒன்றிணைந்து கல்முனை பிரதேசத் திலுள்ள பெரிய நீலாவணை, மருத முனை, பாண்டிருப்பு, கல்முனை, நற்பட்டிமுனை, சேனைக் குடியிருப்பு, மணல்சேனை ,சாய்ந்தமருது, மாளிகைக்காடு, ஆகிய கிராமங்களில் துண்டுப் பிரசுரங்கள் மூலமும் ஒலி பெருக்கி மூலமும் டெங்கு நோய் மற்றும் ஏனைய தொற்று நோயகள் பரவுவதை தடுப்பதற்கான ஆலோசனைகளையும் வழிமுறைகளையும் கடந்த 20ம் திக்தி செவ்வாய் முதல் வழங்கி வருகின்றனர் அத்தோடு 40 வயதுக்கு மேற்பட்ட நகர சபை உழியர்களைக் கொண்டு கிணறுகள் மற்றும் நீர் தேங்கி நிற்கும் இடங்களில் குளோரின் தூள்களை இட்டும் சுத்தம் செய்து வருகின்றனர்.

## செல்வராஜா.......

ஜோசப்பரராஜ சிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிமலனின் மரணம் காரணமாக ஏற்பட் வெற்றிடத்திற்கு 11,698 விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ள பொன். செல்வராசா தேர்தல் சட்டத்திற்கு இணங்க நியமிக்கப்ப ட்டுள்ளார். பொன்.செல்வராசா கடந்த தேர்தலிலும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் பாராளுமன்ற உறுப்பினராக 6வருடங்கள் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வெள்ள ..........

நிதியை இதுவரை அனுப்பவில்லை என தெரிவிக்கப்படுகிறது. அமைச்சு அனுமதி வழங்கிய நிதி முழுவதையும் திறைசேரி வழங்குவதில்லை என்றும் திறைசேரியின் நிதிநிலைமையைப்பொறுத்தே நிவாரணத்திற்கு எவ்வளவு நிதி வழங்குவது என தீர்மானிக்கப்படும் என திறைசேரி அதிகாரி ஒருவர் கூறியதாக மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணங்கள் வழங்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர்கள் , பிரதியமைச்சர்கள், அமைச்சர்கள் அறிக்கைகள் விடுத்திருந்தனர். மக்கள் பாதிக்கப்பட்டு பல நாட்களாகின்றன. அவர்களுக்கு நிவாரணம் வந்து சேரவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் 94534 குடும்பங்கள் பாதிக்கப்பட்ட தாகவும், 5ஆயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்து அகதிமுகாம் களிலும், நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளனர். மாவட்டத்தில் சுமார் 4ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளன. 35ஆயிரம் ஏக்கர் நெல்வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

## ஜெயசூரிய கிண்ணத்துக்கான கிரிக்கட் சுற்றுப் போட்டி

(டிக்ஸன்)

கல்முனைக் குடி யங்வேட்ஸ் யுத் கழகத்துக்கும் அம்பாறை சில்வா விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான இறுதிப் போட்டி எதிர்வரும் 27ம் திகதி மு.ப 9மணிக்கு அம்பாறை பொது விளை யாட்டு மைதானத்தில் நடைபெற வுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யங்வேட்ஸ் யுத் அணித்தலைவர் ம.றூப்நுபின் தமது அணி முதலில் துடுப்படுத்தாட விருப்பம் தெரிவித்தையடுத்து களம் இறங்கிய யங்வேட்ஸ் யுத் கழகம் தமது 25 ஓவர்களில் 9 விக்கட்டை இழந்து 175 ஓட்டங்களை பெற்றுள்ளது.

பதிலுக்கு துடுப்படுத்தாடிய சில்வா கழகம் தமது 25 ஓவர்களில் சகல விக்கட்டையும் இழந்து 120 ஓட்டங்களை மட்டும் எடுத்தது குறிப்பிடத்தக்கது. ஜெயசூரிய கிண்ணத்தை கல்முனைக்குடி யங்வேட்ஸ் சுவிகரித்துத் கொண்டது.

## நாளை உயர்தரப்பரீட்சை முடிவுகள் வெளிவரும்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகள் நாளை வெள்ளிக் கிழமை வெளிவரவுள் ள்து. இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் ஏ.ஆர்.பி. அமரக்கோன் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சை கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை எதிர்வரும் டிசம்பர் மாதம் 11ம் திகதி தொடக்கம் 22ம் திகதி வரை க.பொ.சாதாரணப் பரீட்சை நடைபெறவுள்ளது. இப்பரீட்சையில் மூன்று லட்சத்து 84 ஆயிரத்து 780 பாடசாலை பரீட்சாத்திகளும் ஒரு லட்சத்த எழுபதாயிரத்த 499 தனிப்பட்ட பரீட்சாத்திகளும் தோற்றவுள்ளனர்.

## பிரதி சுகாதார அமைச்சர் நேற்று காலமானார்

(கொழும்பு)

பிரதி சுகாதார அமைச்சர் பி.ஏ.பி. லயனல் குண்திலகா நேற்று காலை தனது 58 வது வயதில் காலமானார். கம்பஹா மாவட்டப் பிரதிநிதியான இவர் முன்னாள் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக உணவு பிரதியமைச்சராக பதவி வகித்தவர். இவரது பூதவுடல் இவரது இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டடிருந்தது.

## மட்டக்களப்பு.....

பல சிரமதானப் பணிகள் இடம்பெற்றதுடன் மாவீரர் துயிலும் இல்லங்கள் துப்பரவு செய்யப்பட்டும் அலங்கரிக்கப்பட்டும் உள்ளன.

இத்துயிலும் இல்லங்களில் எதிர்வரும் நவம்பர் 27ம் திகதி மாலை ஈகைச்சுடர் ஏற்றும் நிகழ்வுகள் மாவீரர்களின் பெற்றோர்களினால் இடம்பெறும். தமிழீழ விடுதலைப் புலிகளினால் தமிழீழத்தில் மிகப்பெரிய தேசிய நிகழ்வாக கொண்டாட்ப்படும் இம்மாவீரர் நர்ளையொட்டி எதிர்வரும் 26ம் 27ம் திகதிகளில் பொது விடுமுறை தினமாக அனுஷ்டிக்கும் படியும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் துண்டப்பிரசுரம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்கீளில் மாவீரர் நிகழ்வினையொட்டி பல சிரமதான பணிகளும், மரம் நடும் நிகழ்வுகளும் எழுச்சி கீதங்களும் இடம் பெற்றுள்ளன. இப்பகுதிகளில் விளையாட்டுகள், களியாட்டங்கள்,சினிமா பொழுது போக்குகள் என்பவற்றை தவிர்த்து மாவீரர் தின அனுஸ்டிப்புகளிலும் புண்ணிய கருமங்களிலும் மக்கள் ஈடுபடுவது நல்லது என கேட்டுள்ளனர்.

## கிரனைட் வீச்சு........

என்றும் இதனைத் தொடர்ந்து படையினர் சரமாரியான துப்பாக்கியால் சுட்டனர் என்றும் தெரிவிக்கிறது.

இச்சம்பவத்தில் சிக்கி பலத்த காயங்களுக்கு உள்ளான 10 வயது சிறுவனான செபத்தியன் பிள்ளை அன்டன்நிக்ஸன் என்பவரே மரணமானார். இவர் கொழும்புத்துறை மகா வித்தியாலய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. சம்பவம் நிகழ்ந்த அதே வேளையில் அச்சிறுவன் சொப்பிங்வேக் விற்றுக் கொண்டிருந்தார் என்றும் தெரியவருகிறது. இச்சம்பவத்தில் பொது மக்கள் மூவர் காயமடைந்துள்ளனர்.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிக்கேஷன் நிறுவனத்தினரால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.